REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER. T'Phone: 805


# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு
ஸ்தாபகர்: நா. பொன்னையா

மலர் 22 | சுன்னாகம், கர ஐப்பசி ச 21-10-51 ஞாயிறு (காந்தி ஆண்டு 83) | இதழ் 15

JAFFNA COLLEGE LIBRARY
22 OCT 1951
VADDUKODDAI, CEYLON

சாம்பசிவம் அன்ட் கோ.
38 கஸ்தூரியார் வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம்



திறமான கைக்கடிகாரங்கள், சுவர் மணிக்கூடுகள், மேசை, 'பொக்கெற்' கடிகாரங்கள் விற்பனைக்கிருக்கின்றன

N. SAMBASIVAM & Co.,
38, Kasturiyar Road, Grand Bazaar, JAFFNA

# யாழ்ப்பாணம் நகரசபை

## வண்டி குடை சாயுமா?

நமது விசேஷ நிருபர்

**யா**ழ்ப்பாணம் நகரசபைச் சரித்திர வண்டி காடு முரடான வீதியெல்லாம் உருண்டோடிக்கொண்டு இப்போது பொறுத்த இடத்தில் வந்து நிற்கின்றது. ஆம் இரண்டாவது பொதுத் தேர்தல் நெருங்கிவிட்டதைத்தான் குறிப்பிடுகின்றேன். இனித்தான் வண்டியைக் கவனமாகச் செலுத்தவேண்டும். வண்டி குடைசாய்ந்தாற் பின்னர் அரோகராத்தான்: சிக்கலான பாதையில் நிற்கின்றோம். இந்த வீதிகள் எங்களை எங்கு கொண்டு செல்கின்றனவோ? நாங்கள் போகவேண்டியபாதை எது? இவைதான் இன்று யாழ்ப்பாண மக்களின் உள்ளங்களில் எழுங் கேள்விகளாகும்.

யாழ்ப்பாணத்து மக்கள் கடந்த மூன்று வருடங்களாக சுயஆட்சியில் மிக முற்போக்கான ஒரு ஆட்சிமுறையை அனுபவித்துவருகின்றனர்.

ஜனநாயகத்தை அடிப்படையாகக்கொண்டு மாறிவரும் சமூகத்திற்கு அமைய இவர்கள் தங்களைமட்டும் இன்னும் பக்குவம் செய்துகொண்டதாகத் தெரியவில்லை. இந்நிலையில் இன்றைய குறைகள் யாவை என்று ஆராய்வதுடன் புதிய முறைகளைப்பற்றிய விளக்கங்களுமவசியமாகின்றன.

### இன்றைய நிலை

தற்போதுள்ள நகரசபை அங்கத்தவர்களின் தொகை 15. இவர்களுள் ஐவர் வழக்கறிஞர்கள். அத்துடன் ஒரு நியாயவாதியும், ஒரு ஆசிரியரும், உத்தியோகம் பார்த்து இளைப்பாறிய ஒருவரும் உட்பட வேறும் எழுவர் உளர்.

நகரசீரமைப்புக்கேற்ற எவ்வித திட்டமேனும் தயார் செய்யப்படவில்லை. சபைக்குள்ளே பிளவுகளும் கட்சித் தகராறுகளும் இருந்துகொண்டு நிரந்தரமான வேலைகளுக்கு முட்டுக்கட்டைபோடலாயின. அத்துடன் சொந்த விருப்பு வெறுப்புக்களும் எரிச்சல் பொறாமைகளும் தாண்டவமாடலாயின.

பொதுவாக நோக்குமிடத்து முறைப்படி ஏற்படுத்தப்பட்ட வரியிறுப்போர் சங்கம் தொழிற்படவில்லை. தமிழ்க் காங்கிரஸ்காரர் ஒருசிலர்தான் குசுகுசு கூட்டங்கள் வைத்துப் பலதும்பத்தும் பேசினர். ஆகவே, செலவாகும் பணத்துக்குக் கணக்குக் காட்டுமாறு கேட்க ஒருவருமில்லை. வரியிறுப்போரும், இராமர் ஆண்டாலென்ன? இராவணனாண்டாலென்ன? என்று சொல்லிக்கொண்டே வீடுகளிற்கால்நீட்டிக்கொண்டு இருக்கலாயினர்.

இந்த மந்தமானநிலை தொடர்ந்து நிலவுமாயின், யாழ்ப்பாணத்தின் கதி அதோகதியாகவேண்டியதுதான்.

### செய்யவேண்டியன

நிலைமையைச் சீர்ப்படுத்தி யாழ்ப்பாணம் நகரசபை செவ்வனே நடைபெற வேண்டுமானால் நாட்டிலே நல்லவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் அங்கத்தவர்களாகச் சபையில் இடம்பெற வேண்டும். குணம் என்னுங் குன்றேறிநிற்பவர்களும் அனுபவத்துடன் ஆற்றல் நிறைந்தவர்களும் வரவிருக்கும் புதிய நகரசபையில் இடம்பெறவேண்டும்.

யாழ்ப்பாண நகரத்திலுள்ள ஒவ்வோர் வட்டாரத்திலும் சராசரி 2200 வாக்காளர் இருக்கின்றனர். ஒரு வட்டாரத்தின் ஆகக் கூடிய வாக்காளரின் தொகை 3253; ஆகக் குறைந்த தொகை 985. இவ்வளவு தொகையினரிலும் திறமை வாய்ந்த 25 நல்லவர்களை ஒவ்வோர் வட்டாரத்திலுந் தேடிப்பிடிக்க முடியாதா? இத்தனைக்கும் இன்று அவசியம் செய்ய வேண்டியது யாதெனில் ஒவ்வோர் வட்டாரத்திலும் ஒரு வரியிறுப்போர் சங்கத்தை அமைப்பதேயாகும். வட்டாரச் சங்கங்கள் எல்லாம் ஒன்றாக இணைந்து மத்திய சங்கம் ஒன்றை அமைத்து வேலைசெய்யுமாயின் சங்கத்தின் சார்பில் நகர்சபைப் பொதுத்தேர்தலுக்கு அபேட்சகர்களை நிறுத்துவது மிக இலகுவாகிக்கொள்ளும். நல்லவர்களைத் தெரிவதும் சாத்தியமாகிவிடும்.

# மலைநாட்டில் தமிழ் ஆர்வம்

## வதுளை நகர் தந்த சந்தர்ப்பம்

**மலைநாட்டிலுள்ள தமிழ்** மக்களின் தமிழ் ஆர்வத்தை நேரிற் பார்த்து மகிழ்வதற்கு வதுளையிலுள்ள காந்தி சேவா சங்கத்தினர் ஒரு சந்தர்ப்பத்தை எனக்கு அளித்திருந்தனர். அவர்களின் அழைப்பை யேற்று வதுளையில் மிகச் சிறப்பாக நடைபெற்ற காந்தி ஜயந்தி விழாவிற் கலந்துகொண்டேன். வதுளை பட்டினசபைத் தலைவர் திரு. என். கதிரேச சுவாமி அவர்களின் தலைமையிற் குதிரைப் பந்தய மைதானத்தில் நடைபெற்ற இவ்விழாவில் தமிழிலும், சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் பிரமுகர்கள் பலர் விரிவுரைகள் ஆற்றினர். காந்திஜியின் தியாக வாழ்க்கையின் உயர்வைப்பற்றி உணர்ச்சியுடன் பேசினார்கள். மனிதத்தன்மையின் நிறைவாக விளங்கிய காந்திஜியின் பளிங்கு போன்ற வாழ்க்கையிற் கரி பூசுவதற்குச் சேர்ச்சில் இன்னுந்தான் தயங்குவதாயில்லை. மகாத்மா ஒரு சமயம் உண்ணாவிரதம் இருந்தபோது 'க்ளூகோஸ்' என்ற சக்தியூட்டும் மாவை நீருடன் கலந்து அருந்தினார் எனச் சேர்ச்சில் துரை தமது இரண்டாவது யுத்தகால ஞாபகங்கள் என்ற நூற்றொகுதியிற் குறிப்பிட்டிருக்கின்றார். பேடி கையிலுள்ள ஒரு பேனாத்தான் இப்படிக் கஞ்சத்தனமாக எழுதுமேயன்றிக் கௌரவம்படைத்த ஒருவர் இப்படிக் காமா சோமாவென எழுதமாட்டார். பிரித்தானிய சக்கராதிபத்தியம் பொலு பொலு வென்று இடிந்து வீழ்ந்து மண்ணோடு மண்ணாகிவிட்டது. அதற்குச் சமாதியுங்கட்டியாகிவிட்டது. அந்தச் சமாதியில் முளைத்துள்ள புல்லைத்தானும் இன்று பிடுங்கி எறிவதற்குச் சக்தியற்றுக் கிடக்கும் சேர்ச்சில்துரை காந்திஜியின் களங்கமற்ற வாழ்வைக் கறைப்படுத்த முயல்வதைப் பாகிஸ்தான் அரசியல்வாதிகள் கூடப் பார்த்துக்கொண்டிருக்கமாட்டார்கள். உலகப் பிதாவாகிய காந்திஜியின் பிறந்த தினத்தைக் கொண்டாடுவதில் வதுளை முஸ்லீம் அன்பர்கள் ஊக்கத்துடன் உழைத்தனர். நன்றியுரை கூறியவர்களுள் ஒருவரான முஸ்லிம் நண்பர் அன்று செந்தமிழிற் பேசிய அழகே தனி.

இவ்வளவு கோலாகலத்துடன் நடைபெற்ற விழாவானது வதுளை மக்களின் உள்ளத்தில் மிகுந்த குதூகலத்தையுண்டாக்கி இருப்பதில் எவ்வித நூதனமும் இல்லை.

### திரு. இரத்தினசுவாமி

வதுளை காந்தி சேவா சங்கத்தின் தலைவராக திரு. கே. எஸ். இரத்தினசுவாமி அவர்கள் பணியாற்றும்போது இத்தகைய விழாக்கள் வெற்றி பெறுமல் இருப்பது எங்ஙனம்? திரு. இரத்தினசுவாமி அவர்கள் ஒரு காந்திப் பக்தர்; தமிழ்ப்பற்று மிகுந்தவர்; பணமுஞ் செல்வாக்கும் படைத்தவர். அனைவரையும் சகோதரர்களைப் போல அன்பு பாராட்டி உபசரிப்பவர். தமிழ் மக்கள் தமது உரிமைகளைப் பறிகொடுக்காது கௌரவத்துடன் வாழவேண்டுமென்பதில் நம்பிக்கை பூண்டவர். அதற்காகச் சலியாது உழைத்தும் வருபவர். வதுளை காந்தி சேவா சங்கத்தின் ஆதரவில் ஒரு சிறந்த வாசிகசாலையை அமைக்க வேண்டுமென என்னுடன் பேசும்போது தெரிவித்தார். இம் முயற்சிக்கு அனைவரின் ஆதரவும் ஒத்துழைப்புங் கிடைத்தேயாக வேண்டும். ஏனெனில் திரு. இரத்தினசுவாமி எடுத்த காரியம் யாவிலும் வெற்றி காணும் பெற்றிவாய்ந்தவர்.

**புதுமைப்பித்தன்** குடும்ப சகாய நிதியைப்பற்றி நான் அவருடன் பேசியபோது அவர் மிகுந்த அனுதாபங் காட்டியதுடன் தமது அன்பர்களின் உதவியுடன் பணந்திரட்டி அனுப்புவதாகவும் வாக்களித்தார்.

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

# பாகிஸ்தான் பிரதமர்

## சுட்டுக் கொல்லப்பட்டார்



பெரும்புகழ் படைத்தவரும் மிக்க திறமை வாய்ந்த அரசியல் வாதியுமான லியாகத் அலி கான் அவர்கள் சென்ற செவ்வாய்க்கிழமை ருவல்பிண்டி என்னும் நகரில் மாபெருங் கூட்டமொன்றில் பேசப் புகும்பொழுது யாரோ ஒரு சதிமோசக் கலகக்காரனாற் சுட்டுக்கொல்லப்பட்டார். படுகொலை செய்தவன் ஓர் அப்கானிய முஸ்லிம். இவருடைய பிரிவு பாகிஸ்தானுக்குப் பெரும் நட்டமென்றே சொல்லவேண்டும். ஜனாப் ஜின்னாவுக்குப் பின் பாகிஸ்தானுக்கு உயிர் நாடியாக நின்று அரசியலைத் தளம்பவிடாது நடத்திச்சென்றவர் இவரே. ஜனாப் ஜின்னாவுக்கு எவ்விதத்திலும் இவர் குறைந்தவரல்லர். வாக்கு வல்லபம் வாய்ந்தவர். தர்க்க முறையில் எதிர்த்து வாதுபுரிவதில் மிக்க சாமர்த்தியம் படைத்தவர்; பாகிஸ்தானது உரிமைகளைக் காப்பதில் மிக்க ஆர்வமுடையவர்; இவரிடத்தை நிரப்ப வேறு எவரையுங்காணோம். பாகிஸ்தான் இராணுவக் கட்சியினர்க்கிடையில் நீண்டகாலமாகச் சதியாலோசனைகள் நடந்துவந்தன. பாகிஸ்தான் அரசியல் முறையில் அநேகர் திருப்தியடையவில்லை. அதை முற்றாகத் திருத்தி அமைக்க வேண்டுமென நெருங்கிமுயன்ற கட்சியினர் செயலிதுவாகுமோவென்றுங் கருதவேண்டியதாகின்றது. இற்றைக்கு ஆறு மாதங்களுக்கு முன்னர் இராணுவப்பகுதியில் சூழ்ச்சிகள், சதிமோசங்கள் நடப்பதைக் கண்டு, பாகிஸ்தான் பிரதம மந்திரியாராகும் லியாகத் அலிகான், அநேக இராணுவ உத்தியோகத்தர்களைச் சிறைப்படுத்தினர். இவர்கள்மீது கொண்டுவரப்பட்ட சதி ஆலோசனை வழக்குகள் இப்போது நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுகின்றன. இக்கட்சியினரே இக்கொலைக்குக் காரணரோ தெரியவில்லை. பலவிதத்திலும் மிக்க பெருமையும் தகுதியும் வாய்ந்த ஒருவரைக் கொலைசெய்யத் துணிந்தவரே! இதனால் பாகிஸ்தான் அடைந்துள்ள பெரு நட்டத்துக்கு எல்லையில்லை. இப் படுகொலையைக் கண்டு திடுக்கிடாதவரில்லை. உலக மக்களின் அனுதாபம் பாகிஸ்தானை நோக்கிச் செல்கின்றது. கொலைசெய்து தங்கள் கொள்கைகளை நிலைநாட்ட முன்வருவோர் உலக சமாதானத்துக்குப் பெரிய ஆபத்தை உண்டாக்குபவராவர்.

[தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க]

வெளிவந்துவிட்டது!

தமிழ்நாட்டுச் சிறுகதை மன்னரும்,
உலக இலக்கிய மேதைகளில் ஒருவருமான

புதுமைப் பித்தன்

வாழ்க்கை வரலாறு

எழுதியவர்: ரகுநாதன்

- புதுமைப் பித்தனுடன் நெருங்கிப் பழகியவர் எழுதிய நூல்.
- விரிவான வரலாறும் இரசமான துணுக்குகளும் நிறைந்த நூல்.
- உயர்ந்த முறையிற் படங்களுடன் அழகாக விளங்கும் நூல்.

விலை: தபாற்செலவு உட்பட ரூ. 3 சதம் 50

தனலக்ஷ்மி புத்தகசாலை :: சுன்னாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊர் வதந்தி

கொண்டோடி

- இளவரசியுங் கோமகனும் இலங்கைக்கு வருவார்களாம்.
- ஒருவாரம் இங்கு தங்கும்போது நடனகலா நிகழ்ச்சிகளையும் பார்ப்பார்களாம்.
- 'புறாவ்' பார்ப்பது துப்பறிவேலையாம்.
- 'புறாவ்' பார்த்துக் கொண்டே சிலர் பத்திரிகை நிருபர்களைப் பரிகசிப்பார்களாம்.
- இது கண்ணுக்குள் மண் தூவுங் காரியமாம்.
- காரியம் தெரிந்தவர்கள் கிள்ளிவிட்டுக் கூத்துப் பார்ப்பார்களாம்.
- 'புறாவ்' பார்க்கும்போதுங் கிள்ளி எறியலாமாம்.
- கிள்ளுங் குணங் குள்ளரின் சுபாவமாம்.
- குள்ளநரி மனப்பான்மையும் இதுதானும்.
- இங்குள்ள பத்திரிகை நிருபர்கள் நல்லவர்களாம்.
- இலண்டனிலுள்ள நிருபர்களுக்குப்பசைபூசவேண்டுமாம்.
- கொழும்பிலே 'புறாவ்' பார்ப்பவர்கள் சிலரிடம் பசையே இல்லையாம்.
- கூப்பன் அரிசி ஒருவித பசையரிசியாம்.
- பத்திரிகைகளிற் தகிடுதத்தம் செய்பவர்கள் கூட்டுறவுக் கூப்பன்களாம்.
- கூப்பன் அரிசிபெற வரிசையில் நிற்கவேண்டுமாம்.
- வரிசை தப்பிய சில பேர்வழிகள் பத்திரிகைகளை அண்டி நிற்கின்றனராம்.
- நின்றும், இருந்தும், இரந்தும் இவர்கள் தாளம் போடுவார்களாம்.

ஆசிரியருக்குக் கடிதம்

# சைவக் குருமார்

சைவக்குருமார் யார்? என்னும் தலையங்கத்தோடு ஈழகேசரி 30-9-51 இதழில் வெளிவந்த கடிதத்தை வாசித்தோம். அக்கடிதம் பல சந்தேகங்களைக் கிளப்பியிருப்பதால் அவற்றுக்குத்தக்கவிடைகளைப் பெறும்பொருட்டு இக் கடிதத்தை எழுதுகின்றோம்.

பிராமணர் வேதம் ஓத அதிகாரம் பெறும் பொருட்டும், பிராமணத்துவம் பெறும் பொருட்டும் சூரியமந்திரமாகிய காயத்திரியை உபதேசம் பெற்று வைதிக சந்தியோபாசனை செய்கின்றனர் என்றும் ஆதிசைவப் பிராமணர் இதனோடு சிவ தீட்சை மூன்றும் ஆசாரிய அபிஷேகமும் பெற்றுச் சைவ சமயிகட்குக் குருக்களாய் இருக்கிறார்கள் என்றும் ஆதிசைவ அன்பர் கூறுகின்றார்.

பிராமணருள் சாதாரண பிராமணர், ஆதிசைவப்பிராமணர் என இரு பிரிவினர் உண்டாயின் அதற்கு வைதிக ஷ்மிருதிகளில் பிரமாணமுண்டா? ஆதிசைவப்பிராமணர் என்பதின் உண்மையான கருத்து யாது? இப் பிரிவினர் சிவதீட்சை பெற்ற பின்புதான் ஆதிசைவப்பிராமணர் ஆகின்றனரா? அல்லது பிறப்பிலே இருந்தே ஆதிசைவப்பிராமணர் என்று கருதப்படுகின்றனரா? இவர்களிடத்தே விளங்கும் சைவம் முந்தியதா? அல்லது பிராமணத்துவம் முந்தியதா? பிராமணத்துவம் முந்தியதாயின் இவர்களை ஆதிசைவப்பிராமணர் என்பதின் கருத்து யாது? வைதீகநெறியைவிட்டுச் சைவத்தை ஏற்ற பிராமணரே ஆதி சைவப்பிராமணர் எனக் கருதப்பட்டார் என்று நாம் கருத்துக்கொள்ளின் அது பொருத்தமுடைத்தாகுமா?.

ஆதிசைவரும் பிராமணரும் ஒரே வருணத்தவரா? அப்படியாயின் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் திருத்தொண்டர் வருணங்களைத் தொகுத்துக் காட்டுமிடத்து ஆதிசைவரை வேறாகவும் பிராமணரை வேறாகவும் தொகுத்திருப்பதன் காரணம் யாதோ? சிவசிருஷ்டியால் பிரமன் முகத்தில் தோற்றியவர்கள் ஆதிசைவர் எனப்படும் சிவப்பிராமணர் என்றும் சிவசிருஷ்டி இன்றி பிரமன் முகத்தில் தோற்றியவர் விப்பிரன் அல்லது பிராமணன் என்றும் சைவநூல்கள் கூறுகின்றன. இவ்வித பிரிவுக்கு வைதீக ஸ்மிருதிகளிற் பிரமாணம் உண்டா?

பிராமணருக்கு விதிக்கப்பட்ட ஆன்மார்த்த பூசை காயத்திரி ஜயத்தோடு கூடிய சந்தியோபாசனையா? அல்லது ஸ்ரீ பஞ்சாட்சர ஜபத்தோடு கூடிய சிவபூசையா? முந்தியதாயின் பிந்திய சைவக் கிரியைகளைப்பெறுவது விருத்திப்பொருட்டென்பது தானே பெறப்படுமன்றோ? பிந்தியதாயின் வைதீகநெறியை ஆன்மார்த்த சாதனமாகக் கொள்ளாதவர்களைப்பிராமணர் என எவ்விதம் கொள்ளலாம்.

சிவாகமக் கிரியைகளில் வேத மந்திரம் ஓதவேண்டிய இடங்களும் உண்டாதலின் அதற்காகக் காயத்திரி உபதேசம் பெறவேண்டும் என்கின்றார் ஆதிசைவ நண்பர். அது பிரமாணமாயின் காயத்திரி உபதேசம் பெறாத சைவ தேசிகர்கள் எவ்விதம் வேதமந்திரங்களையுடைய சிவாகமக் கிரியைகளைச்செய்ய அதிகாரமுண்டு?

ஆகமக் கிரியைகளையுடைய கோயிற் பணியும் வேதசம்மதமுடையதாயின் அப்பணிசெய்யும் கோயிற் பூசகர்களை வைதீகப் பிராமணர்களாகிய ஸ்மார்த்தர்கள் விலக்கி வைப்பதன் காரணம் என்னையோ?

எச்சமயத்தவர்க்கும் அவரவர் சமய முதனூல்களைக் கற்க உரிமை யிருத்தல்வேண்டும். பௌத்தர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் அவ்வித உரிமைகள் உண்டென்பதை நாம் எல்லோரும் நன்கு அறிவோம். பிராமணர்

(தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க)

காங்கேசன்துறையில் ~~~

திறமான பல ரக சீமேந்து, மலையாளம் கொழுக்கி ஓடுகள், செங்கல், பயர்ஸ்ரோன் ரயர், ரீப்புகள் மற்றும் பலசாய்ப்புச் சாமான்களும் விலை சகாயமாய்க் கிடைக்குமிடம்:—

நியூகோ ட்ரேடிங் கம்பனி

காங்கேசன்துறை

தந்தி விலாசம்: " நியூகோ ":: டெலிபோன்: நம்பர் 25

[4390]

சகல பயிர்களுக்கு

CCC பசளைகள்

இலங்கையின் பசளை வியாபாரத்தில்
40 வருடகால அனுபவத்தின் பயனாக

நாங்கள்

C C C

கலவைப்பசளைகளை

தரக்கூடியவர்களாக இருக்கிறோம். இவை இலங்கையில் எல்லாப் பாகங்களிலும் எல்லாப் பயிர்களுக்கும் ஏற்கக்கூடியதாக எமது கமத்தொழில் நிபுணர்களால் விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்டவை.

இந்தக் கலவைகள் முழுவதும் மிகவும் உயர்தரமானவை; உத்தரவாதத்துடன் பரிசீலனை செய்யப்பட்டு விற்கப்படுகின்றன. இவைகள் தற்கால யந்திரங்கள் மூலம் கலந்து நெரிக்கப்பட்டிருக்கின்றன. எமது கமத்தொழில் நிபுணர்கள் உங்களுக்கு இலவசமாக ஆலோசனை கூறுவார்கள்.

கொழும்பு
கொம்மேர்ஷல்
கொம்பனி,
லிமிற்றெட்.

[பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டு, அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது.]

பசளைக்கு ஒழுங்கு செய்யும்போது கொழும்பு கொம்மேர்ஷல்கொம்பனியார் விற்கும் C C C கலவைப் பசளையையே பார்த்து வாங்குங்கள்.

The
Colombo
Commercial
Company,
LIMITED.

INCORPORATED IN
GREAT BRITAIN
LIABILITY OF MEMBERS Ltd.

தந்தி: COSSACK, தபாற்பெட்டி இல. 33. பேசுந்தந்தி இல. 5351.

[4413]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

★ நவாலியூர் சோமசுந்தரப் புலவரவர்களது நாமகள் புகழ்மாலை......என்ற நூலைப் படிக்கும் காலத்து...... 'வறுமையே! நீ வாழி' என்று வாழ்த்துமாறு ஏவுகிறது.

# வறுமையே நீ வாழி!

○ வ. நடராஜா ○

துறைமங்கலம் சிவப்பிரகாசசுவாமிகள் ஒருமுறை கல்லைக் கட்டிக்கொண்டு கடலில் விழ ஆயத்தஞ்செய்தார். அவருக்கு அந்த எண்ணத்தை உண்டாக்கியவர் அப்பர் சுவாமிகள் ஆவர். அப்பர் சுவாமிகளின் வாக்கு நயத்தில் ஈடுபட்ட சிவப்பிரகாசர், தமக்கும் அப்பர் சுவாமிகளைப் போற் பாடும் வல்லபம் கிடைக்குமெனின் தாமும் கல்லுடன் கடலில் விழத் தயார் என்கிறார். இதை,

பாட்டால் மறைபுக ழும்பிறை
சூடியைப் பாடிமகிழ்
ஊட்டா மகிழ்சொல் இறைவனைப்
பாடி உவப்புறக்க
வேட்டான் மலிபெருங் கல்அவன்
போல மிதப்பனெனப்
பூட்டா மறிதிரை வார்கடற்
கேவிழப் போதுவனே

என அருமையாகக் கூறியுள்ளார். இப்பாடலும் இச் சம்பவமும் நவாலியூர் சோமசுந்தரப்புலவரவர்களது *"நாமகள் புகழ் மாலையும் இலக்குமி தோத்திரமும்" என்ற நூலைப் படிக்கும் காலத்து மனத்தில் தோன்றி 'வறுமையே! நீ வாழி' என்று வாழ்த்துமாறு ஏவுகிறது.

ஆம்; புலவர் அவர்களுக்கு அந்த வறுமைநிலை ஏற்பட்டமை இலக்கிய ரசிகர்களுக்கு ஒரு வாய்ப்பாயிற்று. கடவுளர் "விரும்பிய அர்ச்சனை பாட்டேயாகுமாதலாலும்", 'புகழ்ச்சி விருப்பர்' ஆதலாலும், புலவர் அவர்களுக்கு வறுமைப் பிணியையும் உடற் பிணியையும் நல்கி அதற்கீடாக இப்பாடலை உவந்து ஏற்றனர்போலும்.

"வெண்டிரு நீறு புனையும் மாதவர்க்கு விருந்துசெய்தலும் பெருமிடி" புனிதமான மிடியல்லவா? புலவர் அவர்களும் "முந்தை ஊழ்வினை தந்த சமுசாரபந்தத்தால்' மிடியுற்றார். நேரே முருகப் பெருமானிடம் சென்றார். எனது "முட்டினைத் தவிர்த்தருள் முருகா" என்று விண்ணப்பித்தார். முருகன்,

என் 'தந்தையோ யாசகப்
பித்தன்; என் தாய்நீலி"
எனக்கு "சமுசாரமோ இரண்டு;
சங்கடம் எனக் குன்னிலும்
பெரிது;
உனக்குநான் தரவசதி ஒன்றும்
இல்லை;
பக்தனை அறக்கும்கற் பாமாலை
அலதுபொற்
பணிமாலை இல்லை; என்கை
பற்றுவேல் பற்றுமேல் பற்று"

என்று பதில் கூறினர். 'அவ் வேல் ஒருகாசும் பற்றாது; ஆகையால் புலவர் அவர்கள்,

"செங்கண்நெடு மாலூமும்
அன்பர்அக மும்குடிகொள்
செம்பதும மலர்வல்லி பாதம்"
நாடி (பக். 157)

'யான் நின்பால் இரப்பது'

"ஆன் அல்ல; நல்லஐந்
தரு அல்ல; மணியல்ல
அழியாத கல்வியல்ல;
அமரர்பெரு வாழ்வல்ல;
அவர் உண்ணும் அமுதமல்ல;
ஆடைஆப ரணமல்ல;
வான் அல்ல; மண் அல்ல;
வைகுந்த அரசமல்ல,
வடிவல்ல; மடியாத வயதல்ல;..."
சாண்வயிறு தூர்க்கவேதான்".

'தா' என்று இரந்தார். (பக். 157). கவிஞர்கள் திருவுடையாரிடத்து வேண்டுவது வேறென்ன? "ஒரு கற்று (கன்று + ஆ) தாவல்லையே" என்று தானே அன்றொரு கவிஞர் கேட்டார்.

மருகிபால் நேயம் பூண்டு, அவளடிமையாய் வாழும் புலவர் அவர்களுக்கு மாமியாகிய இலக்குமி, கடாட்சம் புரிவாளா?

புலவர் விரும்பியது கிடைக்கவில்லை. செல்வர்பால் சென்று 'ஈ' என இரக்கலாமா? என்றெண்ணினர். மானம் தடுத்துப் பின் தள்ளியது; ஆற்றுமை முன் தள்ளியது; பொய்யர்களைப் பாடினர்; பலன் இல்லை; 'என்னை அடிமை கொண்ட செந்தமிழ்த் தெய்வமே நீ என் பற்றுக்கோடு. உன் புகழ்பாடி, மாலை சூட்டுவதே என்கடன்; பொய்யர்களைப் பாடிக் காலம் கழித்தேனே' எனக்கழிவிரக்கமுற்றார். செந்தமிழ்க் குலதெய்வத்தை நோக்கி,

"இல்லாமை யால்வந்த
அயரினுல் மிகநொந்து
இரக்கத் துணிந்துமானம்
ஏகாது பின்தள்ள
ஆற்றுமை முன்தள்ள
இடையூச லாடியாடி
பல், ஆயிரம்தரம்
காட்டியும் நாவினுற்
பயிலாத மொழிபயின்றும்
பணியாத பேரைப்
பணிந்தும்முன் திறவாத
படலைபல பலதிறந்தும்
பொல்லாத வஞ்சரைப்
பாடியும், புகல்கின்ற
பொய்ம்மைமொழி செவிமடுத்தும்
போற்றமுன் பெருமைபறி
போகவிட் டென்மனம்
புண்பட்ட வாறுபோதும்
செல்லாத செல்வமும்
திருவடிச் சேவையும்
சிறியெனுக் கருளுகண்டாய்.
(பக். 32)

என்றும்,

புன்மையும் நோயும்
கெடுத்துயிர்க் குற்றமும்
போக்கிவினி அருள்புரிகுவாய்"
(பக். 33)

என்றும் வேண்டிப் பாடுகிறார். இவ் வேண்டுகோள் பலன் தந்தது. இவ்வாறு நிலையற்ற பொருட் செல்வ நெருக்கடிக்குள் வதிந்து அதன் இடுக்கித்தாக்குதல்களுக்குள் நின்றுகொண்டே நிலையான செல்வம் வேண்டுதலை,

[தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க]

*நாமகள்புகழ்மாலை: ஆசிரியர்: நவாலியூர் சோமசுந்தரப்புலவர்; உரையாசிரியர் பண்டிதை பா. பரமேஸ்வரியார்; பிரசுரம்: ஓறியன் பதிப்பகம், யாழ்ப்பாணம்; விலை: குறிக்கப்படவில்லை.

# மண்டியிட்டுக்கிடக்கின்றோம்!

— வரன் —

அடகெடுவாய், சுதந்திரத்தை அடைந்துமென்ன
அன்னியர்கள் ஆட்சிமுறை அற்றுப் போச்சோ?
மடமடென வெள்ளையரை அகற்றி விட்டு
மக்கள்விழை சுதந்திரத்தை நிறுவி விட்டால்,
கடல்புடை சூழ் இலங்கைமக்கள் கவலை யெல்லாம்
காற்றுகப் பறக்குமெனக் கயிறு விட்டுத்
தடல்புடலாய்த் திரிந்துபிர சாரஞ் செய்த
தலைவர்கட்கே சுதந்திரமாம், மக்கட் கல்ல.

திரிகோண மலைத்துறையைத் தியாகஞ் செய்தும்
திடமுடனே கல்லோயாத் திட்டம் போட்டும்
பரிவாக இடங்கொடுத்தோம் ஆங்கி லர்க்கும்
பணமூட்டைப் பலம்படைத்த அமெரிக் கர்க்கும்;
பெரிதான நண்பர்களைப் பிடித்துக் கொண்டோம்,
பறக்கின்றோம் பூவுலகின் அட்ட திக்கும்
சரியான கியாதிபெற்றோம், சன்பிரான் சிஸ்கோ
சமாதான உடன்படிக்கை கைச்சாத் திட்டோம்.

தாய்நாடாம் பாரதத்தைத் தள்ளி வைத்தோம்,
தணியாத மையல்கொண்டோம் பாகிஸ் தானில்;
வாய்வீரம் பேசிஎமைப் பெரிதா யெண்ணி
வலியப்போய்ப் போர்ச்சுழியில் மாட்டிக் கொண் [டோம்,
சாய்வான சட்டங்கள் பலதுஞ் செய்து,
தமிழ்பேசித் தலைமுறையாய் வாழ்ந்த ஈழத்
தாய்பெற்ற ஏழுலட்சம் தோட்ட மக்கள்
தம்முரிமை பறித்தவரைத் தெருவில் விட்டோம்.

தாய்மொழிகள் தலையெடுக்க விடாது நாட்டில்
தலைமையிடம் ஆங்கிலத்திற் களித்துக் காத்து,
வாய்மொழியால் மக்களைநாம் வெருட்டி விட்டு
வாளேந்தும்சிங்கேற்றுக்கொடியுங்கொண்டோம்,
தூய்மையிலா மதுசூது குதிரை யோட்டம்
துணிந்தகற்றச் சட்டங்கள் யாவும் செய்யோம்,
ஆய்வரிய சமயநெறி ஆய்ந்தார் போல
அரசியலிற் சமயத்தைப் புகுத்தி நின்றோம்.

விறுவிறென விலைவாசி விஷம்போ லேற
விளைபொருளின் வளங்குன்ற, வேலை யின்றி
தறதறென முழிசுகிறார் தவித்து மக்கள்
தரித்திரத்தால் பிணிபலவால் தளர்ந்து வாடி,
பறபறெனப் பலதினுசாய் உலகஞ் சுற்றப்
பலரையும்நாம் அனுப்பிவிழா விருந்து வைத்து,
கிறுகிறெனக் கடன்பட்டும் மண்டி யிட்டும்
கிடக்கின்றோம், அன்னியரின் தயவைத் தேடி.

ஐரோப்பா யாத்திரை

# விடைபெற்ற காட்சி

வழக்கறிஞர்
அ. அருளம்பலம்

(30-9-51ன் தொடர்ச்சி)

இலண்டன்மாநகரில்பார்க்க வேண்டிய இடங்களில் சாம்ராச்சிய நாடுகளின் பொது ஸ்தாபனமும் ஒன்று. இங்கே ஒரு விசாலமான கட்டிடத்தில் சாம்ராச்சிய நாடுகளிலுள்ள பிரதானமான இடங்களும் தொழில்களும் விவசாயப் பொருள்களும் அழகிய படங்கள் மூலம் காண்பிக்கப்படுகின்றன. உதாரணமாக இந்தியாவின் வடக்கேயுள்ள இமயமலையின் அழகிய காட்சி ஒன்று இங்கே உண்டு. இந்த மலை 29,002 அடி உயரம் உடையது என்றும் இதன் அருகிலுள்ள மலைகளின் பெயர்கள் இன்ன இன்ன என்றும் எழுதப்பட்டிருக்கின்றன. இப்படியே தாஜ்மஹால் கட்டிடத்தின் மாதிரிக் கட்டிடமும் மைசூரில் பட்டுச் செய்கையின் விபரமும் இங்கே அழகாகக் காண்பிக்கப்படுகின்றன. ஆபிரிக்காவிலுள்ள மக்களின் மாதிரி வீடுகள், அவர்கள் உபயோகிக்கும் ஆயுதங்கள் முதலியன அங்கே வைக்கப்பெற்றிருக்கின்றன. இன்னும் அவுஸ்திரேலியாவில் எப்படி ஆடுகள் வளர்த்துக் கம்பளி உற்பத்தி செய்கின்றார்கள் என்பதையும், கனடா தேசத்தில் நீர்ப்பாசன வசதிகள் எவ்விதம் ஏற்படுத்தியுள்ளார்கள் என்பதையும் ஜமேக்காவில் வாழைத்தோட்டங்கள் உண்டாக்குவதையும், சைபிரஸ் தீவில் முந்திரிகைக் கொடிகள் நட்டுப் பழ உற்பத்திசெய்வதையும், சீராலேயோனில் வைரக்கற்கள் தோண்டி எடுப்பதையும், சூடானில் நெற்செய்கை உண்டுபண்ணுவதையும், இலங்கையில் நம்பர் எடுப்பதையும் கண்டிப் பெரஹரா வைபவம் முதலியவற்றையும் காண்பிக்கிறார்கள். இந்தக் கட்டிடத்தை அவதானமாக ஒருமுறை சுற்றி வந்தால் பற் பல நாடுகளின் சரித்திரம் பூமிசாஸ்திரம் முதலியனவற்றை ஓர் அளவிற்கு அறியத்தக்கதாக இருக்கும். இவற்றைப் பார்த்து எனக்கு நிரம்பிய சந்தோஷத்தை உண்டாக்கியது. ஏனெனில் அடுத்தநாள் (15-12-50) ல் இலங்கைக்குத் திரும்ப ஒழுங்குசெய்திருந்தேன்.

அன்று காலை (15-12-50) விழித்தெழுந்து பார்த்த போது எங்கும் வெள்ளை வெளேரென்று இருந்தது. இரவு முழுவதும் பனிபெய்தபடியால் மரங்கள் வீட்டுக் கூரைகள் தெருவீதிகள் எல்லாம் பனியால் மூடப் பெற்றிருந்தன. குளிரும் கடூரமாகவே இருந்தது. என்றாலும் தாய்நாட்டிற்குத் திரும்பும் சந்தோஷத்தினுற் குளிரைக் கவனிக்காமல் வீடு திரும்பவேண்டிய ஆயத்தங்களைத் துரிதமாகச் செய்து முடித்தேன். விடுதியில் உள்ளவர்களுக்கு என்னிடம் எஞ்சி இருந்த இலங்கைத் தேயிலைப் 'பார்சல்' களை வழங்கினேன். இலங்கைத் தேயிலைக்கு இங்கிலாந்தில் பெரிய மதிப்பு. அவர்களும் உவந்து ஏற்று பிரியாவிடை தந்தார்கள். ஆங்கிலச் சங்கத்தின் பிரதிநிதி என்னுடன் துறைமுகம் வந்து "தி ஓறையன்" (The Orion) என்னும் நாவாயில் என்னை ஏற்றிச் சுபசோபனம் கூறி வழி அனுப்பிவைத்தார்.

கப்பலில் ஏறிய அடுத்த நாள் பிஸ்கே குடாக் கடலில் காற்று உரமாக வீசியது. ஆகவே நாவாய் ஆட்டம் கொடுக்கச் சிறுக உவாந்தி எடுத்தேன். கப்பல் உதவித் தளகர்த்தர் என்னை விசாரித்துப் பின்வருமாறு கூறினர். "இங்கிலாந்திலுள்ள தெருக்களில் போய்வருவதிலும் பார்க்க இந்தக் கடல் அபாயம் குறைந்தது. நான் இதே நாவாயில் இங்கிலாந்திற்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையில் முப்பத்தைந்து முறைபோய் வந்திருக்கிறேன். ஒரு முறையாவது ஒருவிதமான விபத்தும் ஏற்படவில்லை. நீர் உற்சாகமாக இருப்பதோடு நிறைய உண்ண வேண்டும்." இந்த உறுதி மொழிகளைக் கேட்டதும் எனக்கு நிரம்பிய சந்தோஷம். மெதுவாக எழுந்து சென்று என்னிலும் பார்க்க அதிகமாக உவாந்தி எடுப்பவர்களுக்கு உற்சாக வார்த்தைகள் கூறி அவர்கள் மனநிலையை உறுதிப் படுத்தினேன். மெது மெதுவாகக் கப்பல் ஆட்டமும் குறைந்தது. இரண்டு நாள் பிரயாணத்தின் பின் ஜிப்ரோல்டார்சேர்ந்தோம். இந்தப் பட்டினம் ஸ்பெயின் தேசத்தின் தென்மேற்கு மூலையில் கடற்கரையில் இருக்கின்றது. இதை 1704-ம் ஆண்டு ஆங்கிலேயர் கைப்பற்றினர்கள்.

—தொடரும்


## தொல்காப்பியம் - எழுத்ததிகாரம்

(நச்சினர்க்கினியம்)

வித்துவான் பிரமஸ்ரீ சி. கணேசையர் அவர்கள் எழுதிய
உரை விளக்கக் குறிப்புக்களுடனும்,
அவர்கள் திருத்திய சில புதிய திருத்தங்களுடனும்

**இரண்டாம் பதிப்பு விரைவில் வெளிவரும்**

[illegible]: தனலக்குமி புத்தகசாலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1930

# ஈழகேசரி

சுன்னாகம், கர௵ ஐப்பசி. ௪
— காந்தி ஆண்டு 83 —
பேசுந் தந்தி இல. 805

## தகுந்த தீர்மானம்

தாய் மொழி மூலம் கல்வி கற்றுக்கொடுக்கப்பட வேண்டுமென்பதை அரசினர் முற்றாக அங்கீகரித்து ஐந்து வருடங்கட்கு மேலாகியும், அது விஷயமாகப் போதிய அக்கறையும் ஆர்வமும் காட்டவில்லை. ஆங்கில மோகிகளின் போலி ஆர்ப்பாட்டங்கட்கு அஞ்சி, இந்த முக்கிய திருத்தத்தைக் காலத்துக்குக் காலம் பின்போடுவதும் மெதுவாகக் கைக்கொள்ளுவதுமாகவே யிருந்துவந்தனர். ஆரம்ப வகுப்புக்களில் மாத்திரம் இதுவரை கல்வி தாய்மொழிமூலங் கற்றுக்கொடுக்கப்பட்டுவந்தது. ஆங்கிலத்திற் கற்றுக்கொடுக்கப்பட்டுவந்த கல்வியைத் தாய்மொழிமூலங் கற்றுக்கொடுக்க ஆரம்பிக்குங்காற் சிற்சில கஷ்டங்களும் தாமதங்களும் ஏற்படுவது சகசம். அத்துடன் ஆங்கில மொழியே இன்னும் பல்லாண்டுகட்குக் கல்வி கற்றுக்கொடுக்கும் மொழியாக இருக்கவேண்டுமென்ற வாதமும் ஆரம்பித்தது.

முற்றுமுழுதாகக் கஷ்டங்கள் நீங்கியபின்னரே இப்புதிய மாற்றம் கொண்டுவரப்படவேண்டுமென்பது சிலரது அபிப்பிராயம். அந்நாள் என்றுதான் வருமோ? நீந்தப்பழக விரும்பினால் நீரில் வீழ்ந்தேயாகவேண்டும். எனவே துணிவுடன் மொழி மாற்றத்தைக் கொண்டுவந்து, எதிர்த்து வரும் கஷ்டங்கள் தடைதாமதங்கள் யாவையென அறிந்து, காலத்துக்குக் காலம் திருத்தங்களைக் காண்பதே முறையாகும். அதைவிட்டுக் கடைசிவரையும் இவ்வரிய விஷயம் பின்போடப்படின் தாய்மொழிக்கு முதன்மை கிடைப்பது எப்போதைக்கோ? இப்போது இலங்கையரசினர் இவ்விஷயமாகத் தகுந்த தீர்மானஞ் செய்து விட்டனர். ஆரம்ப வகுப்புக்களில் மாத்திரமன்று, மேல் வகுப்புக்களிலும் தாய் மொழி மூலம் கல்வி கற்பிக்கப்படவேண்டும் என்பதை உணர்ந்து வேண்டிய ஒழுங்குகளை மேற்[illegible]ள்ள முன்வந்துள்ளனர். எல்லா வித்தியாசாலைகளிலும் 6-ம், 7-ம், 8-ம் வகுப்புக்களில் முறையே 1953-ம், 1954-ம், 1955-ம் வருடங்களில் தாய்மொழி மூலம் கல்வி கற்பிக்கும் முறை ஆரம்பிக்கப்படும். இதனைக்கண்டு நவீன நாகரிகவாதிகளாய் மேலைத்தேச மொழிகளைப் பெரிதும் போற்றிவந்தோர் சிறிது ஆத்திரமடையக்கூடும். ஆரம்பத்திற் சிற்சில தடைகள் சிரமங்கள் ஏற்படலாம். கற்பிக்க வல்ல ஆசிரியர்கள் போதியளவு இல்லை, தகுந்த பாட புத்தகங்கள் இல்லை என்ற சாட்டுகள் கூறப்படலாம். ஆனால் உண்மையான அபிமானத்துடன் தொண்டாற்றும் ஆசிரியர்கட்கு இவை தடைகளாகா. ஆசிரியர்கள் மாத்திரமன்று, அரசினரும் மிக்க உறுதிப்பாடுடன் இந்தத் திருத்தத்தைக் கொண்டு செல்ல வேண்டும். தாய்மொழியே கல்வி கற்பிக்கப்படும் மொழியாக அங்கீகரிக்கப்படின், நாட்டிற் கல்வி முன்னேற்றம் துரிதமடையும். மத்திய பாடசாலைகளில் தாய்மொழிக் கல்வி உறுதியடைந்த பின்னர், உயர்தர வகுப்புக்களிலும் அவ்வித மாற்றங்கள் கொண்டுவர வேண்டியதுதான். போலி எதிர்ப்புக்களை நோக்காது அரசினர் திடமாக நின்று இத்திருத்தங்களைக் கைக்கொள்ள முன்வந்தது போற்றப்படவேண்டியதொன்று.

## அரசியற் படுகொலைகள்

சுதந்திர வுணர்ச்சி மிகப் பரந்துவரும் இக்காலத்தில் அரசியற் கொலைகள் ஒன்றன்பின் ஒன்றாக ஏற்பட்டு வருவது வருந்தத்தக்கது. அரசியல் முறையிலே திருப்தியடையாவிடின் பொதுசன அபிப்பிராயத்தைத் தம்வசப்படுத்திச் சனநாயக முறையை மேற்கொண்டு மாற்றங்களைக் கொண்டுவருவதே முறை. அதைவிடுத்துப் பிழைவழிச் சென்று அடாத முறைகளை அனுட்டித்துப் பயங்கரப் படுகொலைகளைச் செய்தல் இழிந்த செயலாகும். அரசியற் காரணமாக எகிப்து தேசப் பிரதம மந்திரியார் கொல்லப்பட்டார். பர்மா மந்திரியின் கதியும் அப்படியே; பாரசீக நாட்டு மந்திரியார் கொலைசெய்யப்பட்டு இரண்டு மாதங்களாகவில்லை. இப்போது பாகிஸ்தான் பிரதமராகும் லியாகத் அலி கான் அநியாயமாகக் கொல்லப்பட்டார். இப் படுகொலைக்காரர்கள் தமது சொந்தத் துவேஷங்களைத் தீர்த்துக்கொள்ள வழியறியாதவர்களாய் மிக்க பயங்கரமான பழிப்புக்குரிய கொடிய வழிகளை அனுட்டித்தனரே. இதனால் என்ன பயன் அடையப்போகின்றனர்? கல்வியறிவும் அரசியல் ஞானமும் கைவராதமையாற்றான் இந்தக் கொடுமைகள் ஏற்படுகின்றன. சமீபத்தில் ட்ரான்ஸ் ஜோடன் பிரதேச மன்னர் சுட்டுக் கொல்லப்பட்டது யாவரும் அறிந்த விஷயம். பலாத்காரத்தில் இவர்கட்கு இவ்வளவு நம்பிக்கையா? பெரும்பான்மையும் இக்கொலைகள் மத்திய ஆசிய நாடுகளிற்றான் மிகுந்துகொண்டு செல்கின்றன. சனநாயகத்தின் பெருமையை இந்நாடுகள் இன்னும் ஓர்ந்துணர்ந்ததில்லை. பலாத்காரத்தால் மன மாற்றத்தை ஏற்படுத்திவிடலாம், அரசியல் மாற்றத்தைக் கொண்டுவரலாமென்பதெல்லாம் ஒருபோதும் நடக்கப்போவதில்லை. முஸ்லிம் நாட்டினர் பயங்கரமான செயல்களை மேற்கொள்வது போற்றப்படக் கூடியதன்று. வகுப்புத் துவேஷம், சமயத் துவேஷம் என்பனவற்றிற்கு இடங்கொடுக்கும் வரையும் இவ்வித கொடுமைகள் நடந்தே தீரும்.

## செனேட்டர் கனகநாயகம்

### யாழ்ப்பாணத்தில் உபசாரம்

'அமெரிக்காவில் நான் சந்தித்த அமெரிக்கப் பிரமுகர்கள் இலங்கையில் முற்போக்கான ஜனநாயக ஆட்சி நிலவி வருவதாகவே என்னுடன் பேசினர்' என்று செனேட்டர் எஸ். ஆர். கனகநாயகம் அவர்கள் யாழ்ப்பாணம் நகரமண்டபத்திலே தமக்கு அளிக்கப்பட்ட விருந்துபசாரத்தின் போது குறிப்பிட்டார்.

மேயர் வி. பொன்னம்பலம் அவர்களும் யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் கே. ஏ. செல்லையா அவர்களும் செனேட்டர் கனகநாயகம் அவர்களுக்கு மலர் மாலைகள் சூட்டி வரவேற்றனர். மேயர் பொன்னம்பலம் அவர்கள் பேசும்போது சில தமிழ்த்தலைவர்களும் தமிழ்மக்களும் வகுப்புவாதிகள் என்ற குற்றத்துக்கு ஆளாகி வருகின்றனர் எனக் குறிப்பிட்டுத் தாம் ஒருசமயம் தமிழ்க் காங்கிரஸுடன் காதல் கொண்டபோதிலும் செனேட்டர் கனகநாயகம் அவர்களோ வகுப்பு வாதத்தை ஆதரியாது யு. என். பி. யுடன் ஒத்துழைத்து வந்தார் எனக் குறிப்பிட்டார்.

இவ் விருந்து வைபவத்தில் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலுமுள்ள பிரமுகர்கள் பங்குபற்றினர். இதனைச் சிறப்பாக ஒழுங்கு செய்தவர்கள் அனைவருக்கும் செனேட்டர் கனகநாயகம் அவர்கள் நன்றி தெரிவித்தார்கள்.

# மலைநாட்டில் தமிழ் ஆர்வம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காந்தி சேவா சங்கத்தின் செயலாளர்களாக திரு. எம். வி. இராமசாமிப்பிள்ளையும், திரு. ஆர். வி. செல்லத்துரையும் பணியாற்றி வருகின்றார்கள். சங்கத்து அன்பர்கள் அனைவரும் சங்கவளர்ச்சியில் மிகுந்த அக்கறை காட்டிவருகின்றனர். திரு. இராமசாமிப்பிள்ளை சுறுசுறுப்பானவர். ஓர் இடத்தில் அவர் அதிக நேரம் தாமதிப்பதில்லை. விழா சம்பந்தமாக அவர் சலியாது உழைத்தார்.

### திரு. கதிரேச சுவாமி

வதுளை சென்றடைந்ததும் அன்பர்கள் என்னைப் பட்டின சங்கத் தலைவரான திரு. என். கதிரேசசுவாமி அவர்களின் இல்லத்திற்கு அழைத்துச் சென்றனர். திரு. கதிரேச சுவாமி பிரபல வழக்கறிஞராவார். அவரும் அவரது பாரியாரும் அதிதிகளை அன்புடன் வரவேற்று உபசரித்து வருகின்றனர்.

### திரு. நடராசா எம். பி.

வதுளைக்கு நான் சென்ற புகைவண்டியில் திரு. ச. பேரின்பநாயகன் அவர்களும் கொழும்புக்குப் பிரயாணமாகிக் கொண்டிருந்தார்.

"எங்கே கொழும்புக்குத் தானே?" என்றார் திரு. பேரின்பநாயகன்.

"இல்லை, வதுளைக்கு" என்றேன் நான்.

"என்ன விசேஷம்?"

"வதுளை காந்திசேவாசங்கத்தார் அழைத்திருக்கின்றனர்?"

"வதுளையில் நடராஜாவுடன்தானே தங்குகின்றீர்"

எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. அழைத்த அன்பர்கள் ஒழுங்கு செய்திருப்பார்கள் என்று நான் சொன்னேன்.

வதுளைக்குச் செல்லும் அதிதிகள் பலர் திரு. கே. வி. நடராஜா எம். பி. அவர்களின் மாளிகையொத்த மனையிற்றான் தங்கி நிற்பது வழக்கம். இதனை நான் வதுளைக்குச் சென்ற பின்னரே அறிந்தேன். இது விஷயம் திரு. பேரின்பநாயகன் அவர்கள் முன்னரே அறிந்ததொன்று. ஆகவேதான், வதுளையில் நடராஜாவுடன் தங்கி நிற்க ஏற்பாடா? என்று அவர்கள் என்னை அவ்வளவு துணிவுடன் கேட்டிருக்கவேண்டும்.

திரு. கே. வி. நடராஜா அவர்கள் பண்டாரவளைப் பிரதிநிதியாவார். யாழ்ப்பாணம் வயாவிளானைச்சேர்ந்த காலஞ் சென்ற ஆசுகவி வேலுப்பிள்ளை அவர்களின் செல்வப் புதல்வர். சென்ற இருபத்திரண்டு வருடங்களாக வதுளைப் பகுதியிலேயே வாழ்ந்து வருகின்றார். சிங்கள மக்களின் நம்பிக்கையையும் ஆதரவையும் இவர் தாராளமாகப் பெற்று நாட்டுக்குப் பணியாற்றி வருகின்றார். அன்பும் பண்பும் நிறைந்த இப்பெரியார் அனைவருடனும் இதமாகப் பேசுவதை ஒரு கலையாகக்கொண்டிருப்பது போலவே, அவர்தம் அருமை மனைவியாரும் அதிதிகளை வரவேற்று உபசரிப்பதை ஒரு கலையாக்கிக்கொண்டார். இந்தியப் பிரமுகர்கள் பலர் வதுளை செல்லுங்கால் திரு. நடராஜா அவர்களின் இல்லத்திலேயே தங்கி நிற்பதுண்டு. கலைஞன் ராஞ்சன் அவர்களும் மலைநாட்டுக்குச் சென்றபோது திரு. நடராஜா அவர்களின் அதிதியாகவே தங்கியிருந்தார்.

பிரபல வழக்கறிஞராக விளங்கும் திரு. நடராஜா இலங்கை மக்களின் சுதந்திர வாழ்க்கையில் மிகுந்த அக்கறை கொண்டவர். அரசியற் சந்தர்ப்பவாதிகளின் ஒவ்வாத போக்குகள் அவருக்குப் பிடிப்பதில்லை. சிங்களர் தமிழர் ஒற்றுமைக்காக உழைத்து வருகின்றார். சிங்களர்களே திகைக்கும் வகையிற் சிங்களத்தில் விரிவுரைகள் ஆற்றுகின்றார் என அன்பர்கள் பலர் எனக்குத் தெரிவித்தனர். இலங்கையின் அரசியல் நிலைமை பற்றியும் தமிழர்களின் எதிர்காலத்தைப் பற்றியும் அவர் என்னுடன் பேசிய போது அவருடைய அரசியல் தூரதிருஷ்டி நன்கு புலனாயிற்று. ஈழகேசரியின் தந்தையாகிய திரு. பொன்னையா அவர்களின் முற்போக்கான அரசியற் கொள்கைகளை அவர் பாராட்டியதுமன்றி எவ்வளவோ எதிர்ப்புகளுக்கிடையிற் சமூக சீர்திருத்தங்களுக்கு முன்மாதிரியாக இருந்து அரும்பணியாற்றிவந்தார் எனவும் குறிப்பிட்டுத் தமது உற்ற நண்பரான ஈழகேசரி பொன்னையா அவர்களின் பிரிவைக்குறித்துப் பெரிதும் வருந்தினர்.

வதுளையில் விழாமுடிவுற்ற அன்றிரவே திரு. நடராஜா அவர்கள் எம்மைத் தமது இல்லத்துக்கு அழைத்துச் சென்றிருந்தார்கள். யாழ்ப்பாணத்துத் தமிழ் விழாவைப் பற்றிய இனிய நினைவுகள் நடராஜா தம்பதிகளின் உள்ளங்களினின்றும் ஒருபோதும் அகலமாட்டாவென்பதை அவர்களுடன் பல விஷயங்களைப்பற்றியும் பேசும்போது அறிந்துகொண்டேன்.

### திரு. செல்லையா

வதுளையில் வதியும் திரு. ரி. எஸ். செல்லையா அவர்களை ஆசிரிய உலகம் நன்கறியும். அனுபவம் வாய்ந்த இப்பெரியார் தெல்லிப்பழையைச் சேர்ந்தவர். கம்பஹா ஆசிரிய கலாசாலையின் அதிபராக விளங்கியவர். பல வருடங்களுக்கு முன்னர் இவர் இளைப்பாறிய விடத்தும் கல்வி சம்பந்தமான பலவிஷயங்களைப் பிரதி வாரமும் டைம்ஸ் ஒவ் சிலோன் பத்திரிகைக்கு எழுதி வருகின்றார். காந்தி ஜயந்தி விழாவிற் பங்குபற்றிக் கல்லூரி ஆசிரியர்களுக்குரிய பாணியில் ஆங்கிலத்தில் விரிவுரை ஆற்றினர். தமக்குச் சொந்தமான தேயிலைத் தோட்டங்களுடன் மலை உச்சியில் மனைவி மக்களுடன் அமைதியாக வாழ்ந்துவருகின்றார். இலங்கைத் தமிழ் விழா மலரைப் பெரிதும் பாராட்டிப் பேசினர். ஆம், இவரும் ஒரு பத்திரிகைக்காரர் தாமே.

### திரு. வைத்தியலிங்கம்

வதுளையில் வர்த்தகத் துறையிற் பல்லாண்டுகளாகப் புகழுடன் வாழ்பவர்களுள் திரு. ஆர். வைத்தியலிங்கம் அவர்கள் முக்கியமான யாழ்ப்பாணத் தமிழ்ப் பிரமுகராவார். அத்துடன் ஈழகேசரி அபிமானியுமாவார். இவர் தமிழ்மொழிப் பற்றும் சமூக சீர்திருத்த ஆர்வமும் கொண்டவர். யாழ்ப்பாணத்திலுள்ள சைவக் கோயில்கள் ஹரிஜனர்களை ஒதுக்கி வருவதைக் குறித்துப் பெரிதும் வருந்துகின்றார். உடல் நிலை குன்றியிருந்த போதிலும் தமிழ் மக்களின் நல்வாழ்வில் அவருக்குள்ள நம்பிக்கை குறையவேயில்லை. ஆலயப்பிரவேசத்தை ஆதரித்து எழுதும் கட்டுரைகளிற் சிறந்தனவற்றுக்குப் பரிசு வழங்குவதற்கு திரு. வைத்தியலிங்கம் முன்வந்துள்ளார். இதுசம்பந்தமான விபரங்கள் ஈழகேசரியில் விரைவில் வெளியாகும்.

இத்தகைய அன்பர்கள் பலரின் உபகாரங்களைப் பெற்று 'வதுளை நீ வாழ்க!' என்று வாழ்த்திக்கொண்டே நாவலப்பிட்டிக்குப் பிரயாணமானேன்.

—இராஜ அரியரத்தினம்

## சம்பாஷணைச் சிங்களம்

### ஓர் அபிப்பிராயம்

ஆசிரியர் சுவாமி ஞானரத்தின அவர்கள் எழுதிய சம்பாஷணைச் சிங்களம் என்ற நூலைப் பற்றிக் கல்லூரி ஆசிரியர் ஒருவர் எழுதுவதாவது:

இப்புத்தகம் 108 பக்கங் கொண்டது. சித்திர சகிதமானது. ஒழுக்கவிதி, சரீர உறுப்புக்கள் என்பனவற்றோடு கூடிய 15 பாடங்களையுடையது. மாணவர் இலகுவில் கற்றுக் கொள்வதற்கு உதவியாக அநேக அப்பியாசங்களும் இதில் உண்டு

சிங்களம் கற்கும் தமிழ் மாணவர்கட்கு நெடுங்காலமாக இருந்து வந்த குறையை இப்புத்தகம் நீக்குகின்றது. தமிழ் மாணவர்கட்குச் சிங்களம் பயிற்றுவதில் ஈடுபட்டு அனுபவமும் பரீட்சையும் அடைந்துள்ள சுவாமியவர்களால் இயற்றப்பட்ட இந்நூல் புதிய கல்வி முறைக்கிசைய நன்கு எழுதப்பட்டிருக்கின்றது. இந்நூலைக் கற்பின் தமிழ் மாணவர் மிக இலகுவாகவும் விரைவாகவும் சிங்கள மொழியைப் பயிலக் கூடியவராவர்.

மாணவரல்லாத மற்றையோரும் இந்நூலைக் கற்பின் இலகுவாகச் சிங்களத்திற் சம்பாஷிக்கும் ஆற்றலைப் பெறுவார் என்பது திண்ணம். சிங்களம், தமிழாகிய இருமொழிகளுக்கு முரிய நெடுங்கணக்கு எழுத்துக்கள் மாணவரின் வசதிக்கும் உபயோகத்துக்குமாக ஒருங்குசேர்த்து அச்சிடப்பட்டிருக்கின்றன.

தமிழும் சிங்களமும் அரசாங்க மொழிகளாக வந்துவிட்டமையால் இம்மொழிகளை மாணவர்கள் கற்கவேண்டியது அவசியமாகின்றது. எனவே இந் நூல் பயன்படுமென்பது எமது நம்பிக்கை.

புத்தகங்கள், பத்திரிகைகள், விற்பனையாளர்கள்
தமிழ்ப்பண்ணை
யாழ்ப்பாணம். இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கிரஸ் ஒற்றுமை

## இந்தியா

தாண்டன் அவர்களின் தலைமையிற் காங்கிரஸில் ஊழல்கள் மலிந்து ஒற்றுமைக் குறைவு உண்டாயிற்று. அநேக அங்கத்தவர்கள் காங்கிரஸினின்றும் விலகினர். இப்போது பிரதமர் நேரு அதன் தலைமையை ஏற்றுக் காங்கிரஸ் காரிய நிர்வாக சபையை மாற்றியமைத்ததும் பழையபடி காங்கிரஸ் சபை உறுதியடைவதாயிற்று. இச்சபையினின்று விலகிய அநேகர் இதில் மறுபடியாக வந்து சேர்ந்துவிட்டனர். புதிய கட்சிகளை யுண்டாக்கி அவைகளினின்று தொண்டாற்றியவர்கள் அவைகளைக் குலைத்துவிட்டு இப்போது மறுபடி காங்கிரஸில் சேர்வாராயினர். பிரதானமாக உத்தரப் பிரதேசத்தில் இந்த மாற்றத்தால் ஏற்பட்ட நன்மைகள் பல. முன் போக்கு வரத்து மந்திரியாக விருந்த அகமத் கிட்வாய் அவர்களும் மறுபடி காங்கிரஸில் சேர்ந்து தொண்டாற்றுகின்றனர்.

### தேர்தல்

புதிய அரசியலமைப்புச் சட்டப்படி முதற்றேர்தல் அடுத்த இரண்டு மூன்று மாதங்களில் நடைபெற முடிவாயிருக்கின்றது. காங்கிரஸ் சார்பில் அபேட்சகர்களுடைய பெயர்கள் மத்திய தேர்தல் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. அச்சபையினர் ஏற்ற அபேட்சகர்களை அங்கீகரித்துத் தேர்தலில் ஈடுபட உத்தரவளிப்பார்கள். தேசத்துக்குத் தொண்டாற்றும் வன்மையும், பேச்சுத்திறனும், நேர்மையும் தகுதியுமுடையவர்களே அபேட்சகர்களாக வேண்டுமென்பது பண்டிதரவர்களின் வேண்டுகோள்.

### டொக்டர் அம்பத்கார்

மத்திய அரசாங்கத்திற் சட்ட மந்திரியாகக் கடமையாற்றிவந்த டொக்டர் அம்பத்கார் அவர்கள் தமது பதவியைப் பரித்தியாகஞ் செய்துவிட்டனர். நாலு வருடங்களாகக் கடமை ஆற்றிவந்த இவர் சடுதியாக விட்டுவிலகினது மிக அற்புதமாகின்றது. தாம் விலகியதற்குக் காரணங் கூறுகையில் இவர் அவசியமின்றி அநேகர் மீது பழி சுமத்துகின்றார். பிரதம மந்திரி நேரு அவர்கள் மீதும் குறை கூறுகின்றார். மந்திரி சபையினர் தம்மீது நம்பிக்கையும் விசுவாசமும் வைக்கவில்லையாம். தமக்குச் சட்டப்பகுதியின் நிர்வாகம் ஏன் வழங்கவேண்டுமென்கின்றார். வேறு விஷயங்களை ஏன் ஒப்படைக்கக் கூடாது என்றும் வினவுகின்றார். அத்துடன் "இந்து ஆசார திருத்தச் சட்டம்" நிறைவேற்றுது விட்டதையும் குறையாகக் கூறுகின்றார். இவ்வளவு காலமும் பேசாதிருந்துவிட்டு இப்போது தான் இந்தக் குறைகளை எடுத்துக் கூறுகின்றார். அத்துடன் ஹரிசனர்களுக்கு ஒருவித நன்மையும் ஏற்படவில்லையாம்.

# பாலர் கதம்ப நிகழ்ச்சிகள்

## முதலாவதாக நடைபெற்ற விழா

யாழ்ப்பாணம் - கன்னிகாஸ்திரி மட மண்டபத்திற் சென்ற சனிக்கிழமை (13-10-51) மாலை 6 மணிக்கு சுயபாஷா பாடசாலைப் பாலர் வகுப்பு மாணவ மணவிகளின் கதம்பம் ஒன்று, அதிமேற்றிராணியாரான மகாகனம் டொக்டர் எமிலியானுஸ் பிள்ளை ஓ. எம். ஐ. அவர்களின் தலைமையில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. யாழ்ப்பாணத்திலன்று, இலங்கையில் இம்மாதிரியான— சுயபாஷா பாலர் வகுப்பு மாணவர்களை மாத்திரம் கொண்ட— கதம்பவிழா முதன் முதலாக நடைபெற்றது இது வொன்றே எனக் கூறலாம். இத்தனை சிறப்பாகவும் ஒழுங்காகவும் இதனை நடாத்தி வைப்பதற்குப் பெரிதும் உறுதுணையாயிருந்தவர், இப்போது சில மாதங்களின் முன்னதாக வித்தியா பகுதியினராற் பாடசாலைகளின் பாலர் பகுதியினர்க்கெனப் புறம்பாக நியமனம் பெற்றுள்ள வித்தியாதரிசினி ஸ்ரீமதி. ஜீ. ஏ. துரைசிங்கமவர்களேயாவர்.

இவ்விழாவில் 14 தமிழ்- சிங்கள- முஸ்லீம் பாடசாலைகள் பங்கு பற்றின. வடமாகாண உதவி வித்தியாதிகாரி ஜனப் எம். பி. நூர்தீன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினர். நிகழ்த்தப்பட்ட ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஏற்றத்தாழ்வின்றி பாலர்களின் தரத்திற்கு மேம்பட்டதாகவே யிருந்தது. இருந்தும் சில நிகழ்ச்சிகளும் உடையலங்காரங்களும் கீழைத்தேச முறையைத்தழுவியனவாயிருந்திருந்தால் பாலர்களின் மனோபாவனையும் நடிப்பும் இன்னும் மேலாகச் சோபிக்கக்கூடும்.

அதிமேற்றிராணியாரவர்கள் தமது பேருரையில் ஆரம்பபாடசாலைகளில் கீழ்வகுப்பு மாணவர்களைப் பயிற்றும் முறைகளைப்பற்றியும், ஏனைய தேசங்களில் அவர்கள் கைக்கொள்ளும் தன்மைகளைப் பற்றியும், அன்று நடைபெற்ற நிகழ்ச்சிகளின் சிறப்புக்களைப் பற்றியும், வித்தியாதரிசினி அவர்களின் நியமனத்தால் கல்வியுலகுக்குச் சிறப்பாகச் சிறுவர்களின் கல்வியபிவிருத்திக்கு ஏற்படவிருக்கும் மேலதிகமான நன்மைகளைப் பற்றியும் வியந்து கூறினர்; அதன்பின்னர் மத்தியஸ்தர்களால் தீர்ப்பளிக்கப்பட்ட 1. உடுவில் பெண்கள் கல்லூரி. 2 வேம்படிப் பெண்கள் கல்லூரி. 3. பெரியவிளான் றோ. க. பாடசாலை, 4. பருத்தித்துறை இந்துமகளிர் கல்லூரி ஆகிய முதல் நான்கு பாடசாலைகளுக்கும், நிகழ்ச்சி முழுவதிலும் மிகவும் திறமையாக நடித்தவரெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட உடுவில் சரோஜ் குமார் துரைசிங்கம் (வாத்தியக்கோஷ்டித் தலைவன்) அவர்களுக்கும் பரிசுகள் வழங்கினர்.

ஈற்றில் வித்தியாதரிசினி ஸ்ரீமதி ஜீ. ஏ. துரைசிங்கம் அவர்கள் யாவருக்கும் நன்றி கூறினர். இவ்விழா நிகழ்ச்சிகளிற் பங்குபற்றிய ஒவ்வொரு மாணவ மாணவிக்கும் தித்திப்புப் பண்டங்களைக் கொண்ட கையுறைகள் இவரால் வழங்கப்பட்டன.

### பாகிஸ்தான் பிரதமர்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

#### புதிய நியமனம்

ஜனப் அலி கான் அவர்களின் பதவிக்கு இப்போது ஜனப் குவாஜா நாஜிமுதீன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் பாகிஸ்தான் பிரதம தேசாதிபதியாக இதுவரை பதவி வகித்தவர். பாகிஸ்தான் நீதிமந்திரியாக இருந்த ஜனப் குலாம் முகம்மது பிரதம தேசாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

#### பிரதமர் நேருஜி அனுதாபம்

பாகிஸ்தான் பிரதமர் கொலையுண்ட செய்தியைக் கேட்டு நேருஜி கூறியதாவது: ஜனப் லியாகத் அலி கான் பாகிஸ்தானில் நிதானத்தை நிலைபெறச் செய்யும் ஒரு மாபெரும் சக்தியாக விளங்கினர். இந்தியா–பாகிஸ்தான் பற்றிய விரிவான விஷயத்தை நாங்கள் ஒவ்வொருவரும் புதுமுறையில் அணுகி எம்மால் முடிந்தவரை விவகாரங்களையும தகராறுகளையுந் தலையெடுக்கவிடாமல் அமுக்கிவிடமுயலவேண்டும். இருநாடுகளுக்குமிடையே [illegible] யான சமாதானத்தை ஏற்படுத்துவதிலும் நாம் முயற்சி செய்ய வேண்டும்.

### சுதேசவைத்தியர் பதிவுச்சபை வைத்தியர் மு.கதிரவேற்பிள்ளை நியமனம்

திருத்தியமைக்கப் பெற்ற சுதேச வைத்திய சட்டத்தின்படி வடமாகாணச் சித்த வைத்தியப் பிரதிநிதியாகச் சுதேச வைத்தியர்களின் பதிவுச் சபைக்கு வைத்தியர் கே. எஸ். பரிபூரணாநந்தா நியமிக்கப்பட்டிருந்தார். வடமாகாணச் சித்த வைத்தியர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியதின் பேருக தற்காலிகமாக நிற்பாட்டப்பட்ட இவரை இம்மாதம் 11ந் திகதி முற்றாக நீக்கி, அன்னவரின் இடத்தில், யாழ்ப்பாணம் பிரபல சித்த வைத்தியராகிய மு. கதிரவேற்பிள்ளை அவர்களை நியமித்திருப்பதாகச் சுகாதார மந்திரி அவர்களின் நிரந்தரக் காரியதரிசி தெரிவிக்கின்றார்கள். வைத்தியர் கதிரவேற்பிள்ளை அவர்கள் யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, காலஞ் சென்ற பிரபல சித்தவைத்தியர் க. முத்துக்குமாரு (கஸ்தூரியார்) அவர்களின் புதல்வராவர்.

### கோட்டு விற்பனவு விளம்பரம்

#### இல. 3927

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டுப் பிரிவிடல் வழக்கு

பருத்தித்துறை
வேதலிங்கம் கைம்பெண்
சின்னத்தங்கம் வழக்காளி

பருத்தித்துறை
1. சரவணமுத்து கந்தசாமி
2. செல்வநாயகம் மயில்வாகனம்
3. பெண் மகேஸ்வரி எதிரிகள்

மேற்கூறிய இலக்கப் பிரிவிடல் வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்கு அனுப்பப்பட்ட கொமிஷன் அதிகாரப்படியும் 1951-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 24-ந் திகதி சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் பின்னால் விபரிக்கப்படும் ஆதனமும் அதைச் சேர்ந்தவைகளும் அவ்வாதனமிடமாகவிருந்து, மதிப்புத் தொகையில் தொடங்கி முதலாவதாகப் பங்காளருக்கிடையிலும் அவர்கள் வாங்கத் தவறினால் உடனே அந்த இடத்திலேயே பிரசித்த ஏலத்திலும் என்னால் விற்கப்படும்.

##### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் வடமராட்சிப்பகுதி பருத்தித்துறை கோவிற்பற்று சிங்கபாகுதேவன் குறிச்சி சங்கணம்பத்தை நிலப்பரப்பு குளி 9. எல்லை: கிழக்கு, விநாயகமூர்த்தி தம்புவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். வடக்கு, வழக்காளிக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். மேற்கு, முருகப்பர் சண்முகமும் மறுபேரும். தெற்கு, சின்னத்துரைக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இது 1951ம் ஆண்டு ஆவணி மாதம் 16-ந திகதி உலாந்தா மேஸ்தர் K. வேல்முருகு அவர்களால் 2848-ம் இலக்கப் படத்தில் விஸ்தாரிக்கப்பட்டுள்ளது.

இதற்கு விலைமதிக்கப்பட்ட தொகை ரூபா 1610/-

*Alfred A. Sundaram*
Auctioneer and
Commissioner of Sales
*Thumpalai, PointPedro* 6-10-51

### தம்பர் – முத்துப்பிள்ளை

#### நூற்றாண்டின்மேல் வாழ்ந்தவர்

குரும்பசிட்டி வாசராகும் ஸ்ரீமதி தம்பர் – முத்துப்பிள்ளை அவர்கள் சென்ற சில காலமாகத் தம்மைப் பீடித்த நோய் காரணமாகச் சென்ற ஞாயிற்றுக்கிழமை (14-10-51) இரவு தேக வியோகமாயினர். இறக்கும்போது இவரது வயது 104. இவருக்கு 3 புத்திரர்களும் 6 புத்திரிகளும் உளர். சீவந்தராயிருக்கும் 7 மக்களுள் மூத்தவருக்கு இப்போது வயது 85. இவரது மாணக்கிரியைகள் இளைய மகன் திரு. த. [illegible] சாந்தியடைக!

கொழும்பு நிருபர் கடிதம்

# துக்ககரமான வாரம்

18-10-51

இவ்வாரம் ஒரு துக்ககரமான வாரமாக இருக்கிறது. கொழும்பிற் படுகொலையொன்று நிகழ்ந்தது. பின்பு பாகிஸ்தான் பிரதமரின் எதிர்பாராத பிரிவு கொழும்பு மக்களைத் துக்க சாகரத்தில் ஆழ்த்தி விட்டது.

### பாகிஸ்தான் பிரதமர் பிரிவு

பாகிஸ்தான் பிரதமர் சுட்டுக்கொல்லப்பட்டார் என்ற செய்தி செவ்வாய்க்கிழமை இரவு ரேடியோ சிலோன் மூலம் ஒலிபரப்பப் பட்டது. இச்சம்பவம் இலங்கை மக்களைத் திடுக்கிடச் செய்தது. சிறந்த அரசியல் ஞானியும் பாகிஸ்தானை உருவாக்கி நிலைநிறுத்த ஓயாது உழைத்துவந்தவருமாகிய ஜனப் லியாகத் அலிகானின் பிரிவு ஈடுசெய்ய முடியாத தொன்றாகும். புதன்கிழமை கொழும்பிலுள்ள முஸ்லிம் கம்பெனிகளும் கடைகளும் மூடப்பட்டிருந்தன. ஸாகிராக் கல்லூரியும் மூடப்பட்டது. அரசாங்கப்பகுதிகளிலுள்ள கொடிகள் தாழப் பறக்க விடப்பட்டன. இலங்கை மக்களின் சார்பாக ஸேர்ஜோன்கொத்தலாவல அனுதாபத்தைப் பாகிஸ்தான் அரசாங்கத்துக்குத் தெரிவித்தார். புதன்கிழமை மாலை காலிமுகத் திடலில் 5000-க்கு மேற்பட்ட முஸ்லிம்கள் கூடியிருந்தனர். ஸேர் ஜோன் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார். இக்கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### ஸ்ரீமதி சதாசிவம்

எங்கே பார்த்தாலும் ஸ்ரீமதி சதாசிவத்தின் மர்மமான கொலையைப்பற்றிய பேச்சாகவே இருக்கிறது. பம்பலப்பிட்டியிலுள்ள சென்ற் அல்பன்ஸ் பிளேஸில் உள்ள ஒரு வீட்டில் இக்கொலை நடைபெற்றது. இவர்கள் வீட்டிலிருந்த உவில்லியம் என்ற வேலைக்காரன் இப்போது பிடிபட்டுவிட்டான். சதாசிவத்தின் குழந்தை மஞ்சுளா சாட்சியம் கொடுத்ததைப் பார்க்கப் பெரிய பரிதாபமாக விருந்தது. ஸ்ரீமதி சதாசிவத்தின் வீட்டிலிருந்து ஸ்ரீமதி சதாசிவத்தின் கழுத்தை நெரித்தே கொலைசெய்யப்பட்டதென மரண விசாரணையின்போது தெரியவந்தது. திரு. சதாசிவம் இப்பொழுது விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கிறார்; இவர் சிறந்த கிரிக்கெட் ஆட்டக்காரர்; உயர்ந்த குடும்பத்திற் பிறந்து வளர்ந்த பெண் இவ்வாறு கொலையுண்டமை இங்குள்ள மக்களைத் திடுக்கிடச்செய்துவிட்டது.

### சுயமொழிக் கல்வி

ஆங்கில மூலம் படிப்பிக்கப்படும் ஆறும், ஏழாம், எட்டாம் வகுப்புகள் காலகதியில் தமிழிலும் சிங்களத்திலும் நடைபெறுமெனக் கல்விமந்திரி கூறியுள்ளார். 1953ம் ஆண்டு ஜனவரி தொடக்கம் ஆறும் வகுப்புத் தாய்மொழிகளில் நடைபெறும். 1954-ம் ஆண்டு தொடக்கம் 7-ம் வகுப்பும், 1955-ம் ஆண்டு தொடக்கம் 8-ம் வகுப்பும் அங்ஙனம் மாற்றப்படும் இவ்வகுப்புகளுக்கேற்ற பாட புத்தகங்களும் வெளியிடப்படும். இவ்வகுப்புகளுக்கேற்ற நூல்களை எழுதுவோருக்கு அரசாங்கம் மான்யம் அளிக்குமாம்.

ஆனல் ஆங்கில எஸ்.எஸ்.சி. பரீட்சை எடுக்கும் தமிழ் மாணவர் தொகை வருடந்தோறும் அதிகரித்து வருகிறது. கிராமப் பாடசாலைகளில்கூட மாணவர்கள் ஆங்கில பரீட்சையெடுக்கவே விரும்புகின்றனர். பல்கலைக் கழகத்திலும் சிங்களத்திலும் தமிழிலும் வகுப்புகள் நடைபெறவேண்டும். சில பாடங்களை ஆங்கிலத்தில் படிப்பிக்க அனுமதியளிக்கப்படுமாம். அப்படியானல் வினப் பத்திரங்களும் ஆங்கிலத்திலே தானே இருக்கவேண்டும். இவையெல்லாம் அடுத்த தேர்தலின் பின்புதான் திட்டமாகச் சொல்ல முடியும்.

### வானெலியிற் கலைவிழா

"ரேடியோ சிலோன்" தமிழ்ப் பகுதி ஒழுங்கு செய்த கலைவிழா சிறப்பாக நடைபெற்றது. பிரபல சினிமா நடிகர் செல்வி வைஜயந்திமாலா இவ்விழாவில் பங்குபற்றியதால் அவரைப் பார்ப்பதற்காக அநேக சனங்கள் சென்றிருந்தனர்.

### ஸ்ரீமதி காங்கேசர்

கைத்தொழில் மந்திரி திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்களின் தாயார் காலஞ்சென்றுவிட்டார். இவருடைய பூதவுடல் சென்ற ஞாயிற்றுக்கிழமை கனத்தை மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது. சைவக் கிரியைகள் சிறப்பாக நடைபெற்றன.

### கோட்டு விற்பனவு விளம்பரம்

#### இல. 6955

மானிப்பாய் தற்போது வதனை
நம்சிவாயம் செல்லத்துரை
வழக்காளி

உடுவில் மடத்தடி
கணபதி சுந்தரம் கைம்பெண்
பொன்னு, உடுவில் காலஞ்சென்ற கணபதிசுந்தரத்தின் ஆஸ்திக்குப் பிரதி காரியஸ்தராகவும் எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 6955-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இருதுண்டுக் காணிகளை, 1951-ம் ஆண்டு நவெம்பர் (கார்த்திகை) மாதம் 17-ந் திகதி (17-11-51) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபாய் 2499—99-ம், இதில் ரூபாய் 2000-க்கு 25–8–50 திகதி தொடக்கம் 3–11–50 திகதி வரைக்கும் 100-க்கு 8 வீத வட்டியும். பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 224 சதம் 42.

##### காணிகளின் விபரம்


1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி உடுவிற் கோவிற்பற்று உடுவிலிறை "கொட்டையடி" நிலப்பரப்பு ஏழு (7)-ம். தென்மேற்கு மூலையிலிருக்கும் கிணற்றுப் பங்கும், கிழக்கே காலஞ்சென்ற கணபதி சுந்தரத்தின் காணிக்குள் புதிதாக வெட்டிய கிணற்றிற் தண்ணீர்ப் பங்கும, இரு கிணறுகளுக்கும் வழி வாய்க்கால்களும். எல்லை: கிழக்கு, கணபதி சுந்தரத்தின் உரிமைக்காரருக்குரிய ஆதனம்- வடக்கு, கைஒழுங்கையும் ஒழுங்கைமுகப்பும், மேற்கு, வேலுப்பிள்ளை கைம்பெண் பூரணத்துக்கும், ஆறுமுகம் சின்னையாவின் உரிமைக்காருக்குமுரிய ஆதனங்கள். தெற்கு, சின்னவன் ஆறுமுகத்தின் ஆதனம். இதடங்கலும். முற்பதிவு $H\frac{234}{34}$.

2. மேற்படி உடுவிலிறை "கொட்டையடி" நிலப்பரப்பு ஐந்து (5)-ம் தென்மேற்கு மூலையில் இருக்கும் கிணற்றுப் பங்கும், கிழக்கே காலஞ்சென்ற கணபதி சுந்தரத்தின் காணிக்குள் இருக்கும் புதிதாக வெட்டுவித்த கிணற்றில் தண்ணீர்ப்பங்கும், இரு கிணறுகளில் இருந்தும் வழி வாய்க்கால்களும். எல்லை: கிழக்கு, காலஞ்சென்ற கணபதி சுந்தரத்தின் ஆதனம். வடக்கு, கை ஒழுங்கையும் முருகன் பெண் கதிரியின் ஆதனமும். மேற்கு, கணபதி சுந்தரத்தின் உரிமைக்காரருக்குரிய ஆதனம். தெற்கு, சின்னவன் வல்லியின் ஆதனமும் வழி வாய்க்காலும். இதடங்கலும். முற்பதிவு $H\frac{207}{233}$.

குறிப்பு:- வேறு விபரம் அறியவிரும்புவோர் மானிப்பாய் எஸ். இராசேந்திரன் பிரக்கிராசியாரிடம் அல்லது என்னிடம் அறிந்துகொள்ளவும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner &
Licensed Auctioneer
தெல்லிப்பழை 28–9–51 [443]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**தமிழ் இலக்கிய வரலாறு—**

சுருக்கம்: ஆசிரியர்: வி. செல்வநாயகம், எம். ஏ.; விலாசம்: 36, ஸ்ரீ விக்கிரம தெரு. கொழும்பு 6. விலை ரூ. 3-75.

இதன் ஆசிரியர், இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர் திரு. வி. செல்வநாயகம் எம். ஏ., அவர்களாவர். இதன் முகவுரையின்கண், ஆசிரியர் அவர்கள் "சுருக்கமான இந்நூலின்கண் தமிழிலக்கிய வரலாற்றிலுள்ள எல்லா விஷயங்களையும் கூறுதல் முடியாது. இலக்கியப் பண்பினைமட்டும் இதன்கண் சுருக்கமாகக் காட்டியுள்ளேன். அதனோடு தொடர்புடைய மக்கள் வாழ்க்கை, நாட்டின் அரசியல், சமயநிலை முதலியவற்றைப் பற்றியும் ஆங்காங்கு சுருக்கமாகக் குறித்துள்ளேன். புலவர்களுடைய காலம், வாழ்க்கை முதலியவற்றைப் பற்றிக்கூட இந்நூலிற் குறிக்கவில்லை" என்று கூறியுள்ளார்கள். ஆசிரியர் கூறும் இவ்விஷயங்கள் இந்நூலின்கண் சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளன. இதன்கண் தலைசிறந்து விளங்குவது 'நூன்முகம்' ஆகும். இப்பிரிவின்கண் இலக்கியம் இன்னதென்பதும், இலக்கிய வரலாறு இன்னதென்பதும் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன. இதன்கண் தமிழ் இலக்கிய வரலாறு, சங்ககாலம், சங்க மருவிய காலம், பல்லவர்காலம், சோழர்காலம், நாயக்கர்காலம், ஐரோப்பியர் காலம் என ஆறு பிரிவுகளாக அமைத்துக் கூறப்பட்டுள்ளன.

சங்ககாலம் என்னும் பகுதியில், சங்ககாலத் தமிழகம், முச்சங்கங்கள், சங்க நூல்கள், சங்கச் செய்யுளும் மக்கள் வாழ்க்கையும், சங்ககாலப் புலவர்கள், இலக்கியப் பண்பு என்னும் பொருள்கள் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

'சங்ககாலம்' என்னும் பகுதியில் "கி. பி. நான்காம் நூற்றுண்டிற்குமுன் ஏறக்குறைய முந்நூறு ஆண்டுகள் கொண்ட காலப் பகுதியைச் சங்ககாலம் என்பர்" (பக்கம் 6) என்று கூறியுள்ளார்கள். இக் கொள்கையினை விளக்கிக் கூறியிருப்பின் நலமாகும். இப்பகுதியை அடுத்து வரும் 'முச்சங்கங்கள்' என்னும் பகுதியில் (பக்கம் 6–9) 'என்பர்' 'கூறுவர்' என்று ஒரு சில கூறப்பட்டுள்ளனவேயன்றி, வரையறையாகவும் தெளிவாகவும் விஷயங்கள் கூறப்பட்டில. இது மாணவர்க்குரிய சுருக்க நூல் எனினும் அப்பகுதி இனிது விளக்கப்படுதல் நன்று. ஆசிரியர் கூறும் சில முடிபுகள் பின் வருவன: இவை ஆராய்ச்சிக்குரியன.

1. "கி. பி. மூன்றும் நூற்றுண்டோடு முடிந்ததாகக் கூறிய சங்க காலத்திற்கும் கி. பி. ஏழாம் நூற்றுண்டில் ஆரம்பித்த பல்லவராட்சிக் காலத்திற்கும் இடைப்பட்ட காலப்பகுதி சங்கமருவியகாலம் எனப்படும்." பக்கம் 34.

2. "சங்க மருவிய காலத்தில் எழுந்த நூல்களுள் தொல்காப்பியமும் ஒன்றெனக் கருதக் கிடக்கின்றது... ...இவைபோன்ற காரணங்களால் தொல்காப்பியம் சங்க காலத்திற்குப் பிந்தியதென்றே ஆராய்ச்சியாளர் கூறுவர்." பக்கம் 43.

3. "சங்க மருவியகால ஆரம்பத்தில் அந்நூல் (திருக்குறள்) எழுந்திருத்தல்வேண்டும் எனக் கொள்ளக் கிடக்கின்றது." பக்கம் 43.

4. "நாலடியார், இன்னிலை முதலிய நூல்கள் பல்லவர் காலத்தில் எழுந்தவையென்றுங் கூறுவர் ஆராய்ச்சியாளர்.' பக்கம் 47.

பல்லவர்காலம், சோழர் காலம் (பக்கம் 54–111) என்னும் பகுதிகள் மாணவர்க்குப் பயன்படுமாறு தெளிவாக எழுதப்பட்டுள்ளன.

முடிவுரை என்னும் பகுதியில் (பக்கம் 164–178) அரிய விஷயங்கள் பல கூறப்பட்டுள்ளன. இதன்கண் "இலக்கியங்களுக்குக் கலைப்பண்பு இன்றியமையாதது. வாசகர்களை வசிகரிக்கக்கூடிய எத்துணைச் சிறப்புக்கள் ஒரு நூலின்கண் இருந்தபோதும் அதன்கண் கலைப்பண்பு இல்லாவிடின் அது இலக்கியமாகாது" என்று கூறப்பட்டுள்ளது. இதனைப்போன்ற குறிப்புக்கள் பல நூலின்கண்

[தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க]

## பின்வந்த நூல்கள்

**திருக்குறள்:** உரைவளம் பொருட்பால்; பிரசுரம்: தருமபுர ஆதினம், மாயூரம்; விலை: ரூ. 8-0-0.

**என்சரித்திம்:** மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள்: பிரசுரம்: ஸ்ரீ தியாகராஜ விலாசம், 53 பிள்ளையார் கோவில்தெரு, சென்னை 5; விலை: ரூ. 8-0-0.

**புதுமைப்பித்தன்:** வரலாறு; ஆசிரியர்: ரகுநாதன்; பிரசுரம்: தமிழ்ப்புத்தகாலயம், சென்னை 4; விலை:ரூ.3–0–0.

**அகதி:** ஆசிரியர்: 'மாயாவி' புதுமைப் பிரசுரம்: பெண்ணுடம், தென்னுற்காடு ஜில்லா; விலை: ரூ. 2-0-0.

**அழகு மயக்கம்:** நாடகங்கள் ஆசிரியர்: பெ. தூரன்; விலை: ரூ. 1–8–0.

**பாதுஷாவின் காதல்:** நாவல்; ஆசிரியர்: சுதாசன், மொழிபெயர்ப்பு ரா. வீழிநாதன்; விலை: ரூ. 3–0–0. இவ்விரு நூல்களையும் பிரசுரித்தோர்: அமுத நிலையம் லிமிடெட், சென்னை 18.

**கோடை மழை:** ஆசிரியர்: வி. ஸ. காண்டேகர். மொழிபெயர்ப்பு: கா. ஸ்ரீ. விலை: ரூ. 1–0–0.

**ஜாவா யாத்திரை:** ரவீந்திரநாத் டாகுர்; மொழிபெயர்ப்பு: த. நா. குமாரஸ்வாமி; விலை: ரூ. 2–0–0. இவ்விரு நூல்களையும் பிரசுரித்தோர்: அல்லயன்ஸ் கம்பெனி, த. பெட்டி 617, சென்னை. 4.

**தெய்வம் கொடுத்த வரம்:** மொழிபெயர்ப்பு: புதுமைப்பித்தன்; பிரசுரம்: ஸ்டார் பிரசுரம் சென்னை 5. விலை: ரூ. 1–8–0.

**புஷ்ப பாணம்:** ஆசிரியர்: [illegible] லார்பு; பிரசுரம்: [illegible] நிலையம், சென்னை 18; விலை: அணு 8.

# வறுமையே நீ வாழி!

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

சுன்னை முத்துக்குமார கவிராசர்பாலும் காணமுடிகிறது. இதனைற்போலும் பண்டிதர் கணபதிப்பிள்ளை அவர்கள், இந்நூல் அணிந்துரையில்

"நல்லவழி காட்டுவோம்
என்றெரர்கவி ரரசமுகில்
நற்றமிழ்பொழிந்த நாட்டில்
........................
சொல்லென்ற மலரிலே
பொருளென்ற புதுமதுச்
சொட்டிச்சுரக்கும் அமிர்த
சுரபியாய் ஒளிர்கின்ற
சோமசுந் தரநாம சுகிர்தன்"

என்றுகூறி சுன்னைமுத்துக்குமார கவிராசருக்கும் சோமசுந்தரப் புலவர் அவர்களுக்கும் தொடர்புண்டாக்கியுள்ளார்.

கவிஞர் பரம்பரைத் தொடர்பு இவ்விருவர்பாலும் ஒரு தன்மைத்தாய் அமைந்துள்ளதுபோலும்.

தமிழ்மன்னர் ஆட்சி ஒழிந்தபின், புலவர் அரியராயினர்; புரவலர் இல்லையாயினர். இதனுல் இலைமறை காய்போல் வதிந்த புலவர்கள் பட்ட கஷ்டம் சொல்லுந்தரமன்று.

"என்னைப் புரக்கும் மன்னரிலை;
இயற்சீர்பரவும் புலவரிலை
இனிமை விழையும் மக்களிலை,
ஈவோரில்லை" (பக். 25) என்றும்

"கண்டெழுந் திருகரங்
கூப்பித் தலைக்குமேல்
காட்டிஅஞ் சலிசெய்குவார்;
கடவுளே இப்போது
பேசியதும் உங்களது
கதையென்று கண்ணீர்விடுவார்;
தெண்டனிடு வார்இங்கு
வந்தகா ரியமேது
தெரிவிக்க வேண்டுமென்பார்;
சிறிதுபொரு ளுதவியென்
றடியெடுத் திடுமுனம்
திருமுகம் கருமுகமதாய்...
விக்குளெழ மரணவே
தனையுறும் வஞ்சையர்கள்
வீட்டிலே பொருளிரக்கச்
சென்றிடாவரம்
அருளுகண்டாய் (பக். 32)

என்றும், சோமசுந்தரப்புலவர் அவர்களும்;

"கல்லாதபுல்லர் மனை அணுகாமல்
கவியவர்மேல் சொல்லாமல்
நல்குரவில்லாமல் ஈனிக்தத்
அயர்க்கடலும் சொல்லாமல்
நல்ல வரம்தருவாய்"

என்றும்,

"வித்துவான் வருகிறர்
மத்தியா னம்பொழுது
வெய்யிலும் கடிதகையில்
வேறென்ன உதவுவது
சோறென்னி னும்உதவ
வேண்டுமென்றன்பர் கூற
புத்திதான்; ஆர் அரிசி
குத்தியாக் கினதிங்கே
புலவனுர் வருவரென்றே,
போங்காணும் எனமனைவி
ஆங்கார வசனங்கள்
புகல அவர் இகலாகியே...
..............கைகலத் தாடுமூடக்
கயவரைப் பாடாமல்
உனதுபொற் பாதமே
கவிமாலை பாடஅருள்வாய்,"

என்றும், முத்துக்குமார கவிராசரும் கூறுவதிலிருந்து இவ்விரு கவிஞரது தொடர்பும் தமிழ்நாட்டு நிலையும் புலனுகின்றன.

* * *

நாமகளைத் தாயாய், தநையையாய், குலதெய்வமாய், அரசியாய் இன்னும் பற்பல விதமாய் வாழ்த்தி மணங்களித்து புகழ்மாலை சூட்டியுள்ளார் புலவர். சரஸ்வதி தேவியும் தன் பாடலென்று போலும் புலவர் நாவில் நின்று களிநடம் புரிகிறுள். புலவர் அவர்கள் நாமகளைத் தநயையாக்கி,

"கூருந்தொல் காப்பியமாம்
கோமேதத் தொட்டிலி"ல்
பூரணரும்,
"இச்சைப்பட் டார்க்கினியர்
ஏத்தும்சே னவரையர்
நச்சுபே ராசிரிய"ரும்
'நன்கிருந்து தாலாட்ட'வும்
"கன்மாப் பலகைக்
கனகமணித் தொட்டிலிலே
சொன்மாலை ஏழெழுவர்
சூட்டித்' தாலாட்டவும்
(பக் 106) செய்து,

[தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க]





S. 167-X54 TM


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அருமையான மருமக்களே,

மட்டக்களப்பு வாவியிலுள்ள பாடும் மீனைப்பற்றி மருமகன் ம. த. லோறன்ஸ் என்பவர் எழுதிய கட்டுரையை இவ்வாரம் வெளியிட்டிருக்கின்றேன். வி. எஸ். பாக்கியநாதன், த. ஜெயலட்சுமி, எஸ். என். சோமசுந்தரம், சி. சச்சிதானந்தம், ந. உ. ஜெயமணி ஆகிய மருமக்கள் கதைகளுங் கட்டுரைகளும் எழுதி அனுப்பியிருக்கின்றனர். மருமகன் ந. சுந்தரம்பிள்ளை பனையைப்பற்றிய ஒருபாடல் எழுதி அனுப்பியிருக்கின்றார். மருமகள் க. சுகுணவின் கடிதமுங் கிடைத்தது.

மருமக்களே, அடுத்த வாரம் ஒரு போட்டி ஏற்படுத்துகின்றேன். அனைவருக்கும் மகிழ்ச்சிதானே!

வணக்கம்.

## புதிய மருமக்கள்

மே.570. வி. செல்வத்துரை, அச்செழு, நீர்வேலி.

மே.571. சி. பொன்னம்பலம், 361, கோபால ஒழுங்கை.

## பிறந்ததின வாழ்த்துக்கள்

21-10-51—27-10-51

மே.8. அ. ரவீந்திரன், மே 19. இ. தெய்வேந்திம், மே.20. அ. சுப்பிரமணியம், மே.57, வ. கதிர்காமநாதன், மே.211. ச. சுந்தரேஸ்வரி, மே.224. ஆ. தாமு. வீரசிங்கம், மே.226. க. பாலசிங்கம், மே 562. வே. தருமரத்தினம், மே.564. க. குமாரசாமி,

மேற்குறித்த எனது மருமக்கள் இன்றுபோல இன்னும்பல்லாண்டுவாழ்வாராக.

# கலைக் கிழத்தியின் கருணை

வ. மு. இரத்தினேசுவரையர்

மஞ்சுபொதி செழுநீர்போற் செறிந்தபெருங்
கருணையினல் மன்னுயிர்கள் வளர்க்கின்ற
அஞ்சநடை அருங்கிளியே! அயனுடைய
அரும்படைப்பும் மறைத்திறமும் திகழவரு
விஞ்சுகலைக் கிழத்தியெனுந் தயாபரையே!
வீடுமுத லின்பநெறி விளக்குவோய்!
செஞ்சரணத் தாமரையைத் தினந்தோறும்
தியானிப்பான் மயனீக்கி மதித்தருளே.

மன்னியபால் தேனென்ற சுவைப்பொருள்கள்
மலிந்தவுயர் பாடலினுள் வளர்செல்வி!
இன்னியமும் பாணியமாய் இலங்குபுகழ்
எழிற்கலையாய் இலங்குவோய்! இம்மையினில்
துன்னரிய சதுரப்பா டருளிமிளிர்
தூய்யசத்தி என்றறிஞர் போற்றுகின்றார்
என்னுவு மிதயமுமாய் இருந்தென்றும்
எழிற்கருணை பொழிந்தேழைக் கருளுதியே.

# பாடும் மீன் ★

மே.403. ம. த. லோறன்ஸ்

மட்டக்களப்பில் மூப்பது மைல் நீளமுள்ள வாவியொன்றுள்ளது. இந்த வாவியின் மத்தியில் புளியந்தீவு அமைந்துள்ளது. மட்டக்களப்பு வாவி அமிர்தகளி என்னுமிடத்திலே ஒருவகைச் சங்குகள் சுதந்திரமாக வாழ்வதற்கு இடமாயிற்று. இச் சங்குகள் இடையிட்டு மூரல்வதினலே ஏற்படும் ஓர் இனிய ஓசை கேட்போரின் உள்ளத்தை மகிழச்செய்து நீரினுள் இருந்து எழுகின்றது.

இந்த ஒலியையே 'பாடும் மீன்' என்று கூறுகின்றனர். இவ்வொலி நீரினுள் இருந்து எழுவதால், இது நீரினுள் வாழும் ஒருவகைச்செந்துவின் ஒலியாக இருக்கவேண்டும் என்று எண்ணியே 'பாடும் மீன்' என்று கூறினர்போலும்! ஆனல் நமது காலத்தே வாழ்ந்த **யாழ் நூல்** தந்த விபுலாநந்த அடிகளார் இவ் ஒலியை விளக்கிப் பல கவிதைகள் எழுதியதோடுமல்லாது, 'மீன்கள் நீரினுட் பிறழ்ந்து ஆடுதலைக்கண்டோமேயன்றி அவை மகிழ்ச்சியால் பாடுதலை யாண்டுங் கேட்டிலம்' என்று கூறுகின்றார்.

இசையைக் கிளப்பும் இச் சங்குகளையே இந்நாட்டார் நீரரமகளிர் என்று கூறுகின்றனர்.

சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி ஆகிய மாதங்களில், அதாவது இளவேனிற் காலத்திலே, பூரணை நாட்களில் வானம் களங்கமற்றிருக்கும் வேளையில், 'அஞ்சிறைய புள்ளொளியும் ஆங்கன்றின் கழுத்தில் அணிமணியின் இன்னெலியும் அடங்கியபின்', நடுயாமப்பொழுதினிலே தோணியில் ஏறி, வாவியின் நடுவிற்குச் சென்று, ஓசை தவிர்த்து உற்றுக் கேட்டால் இந்த அற்புத ஒலியைக் கேட்கலாம். இதற்குப் பூரணை நாட்களே மிகவும் சிறந்த நாட்களாகும்.

சிலநாட்களுக்குமுன் இங்கேயுள்ள கத்தோலிக்க கல்லூரியிலுள்ள இரு சுவாமிகள் ஒலிபெருக்கியை நீரினுள் அமிழ்த்தி ஒலியைப் பெரிய அலைகளாக்கிப் பின் அதை ஒலிப்பதிவும் செய்துள்ளனர். இவ்விசையை விரைவில் இலங்கை வானொலியிற் கேட்டு இன்பமடையலாம்.

ஈழகேசரி — பாலர் பகுதி

முழுப்பெயர்: ..............................

விலாசம்: ..............................

..............................

..............................

பிறந்ததிகதி: ..............................

..............................

தந்தையார் அல்லது ஆசிரியர் ஒப்பம்

# சைவக்குருமார்

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

அல்லாத சைவர்களுக்குக் காயத்திரி உபதேசம் இல்லை. எனவே சைவசமய மூதனூல்களாகிய வேதசிவாகமங்களைக் கற்கவும் உரிமையில்லை. சமய முதனூல்களைக் கற்க உரிமையளிக்காத சமயத்தை ஒருவன் பின்பற்றுவதனல் அவன் அடையும் பயன் யாது?

பிராமணரல்லாத சைவமக்களின் மரணச் சடங்குகளை நடாத்துவதற்குச் சைவக்குருமாரெனத் தம்மைக் கூறிக்கொள்ளும் பிராமணக் கோயிற் பூசகர்களும் அவர்களைச் சேர்ந்தவர்களும் முன்வருவதில்லை என்பது நாமெல்லோரும் அறிந்த உண்மை. சமயகுரவர் என்போர் ஒருவனது மரணகாலத்திலும் அதன் பின்பும் அவனது ஆன்மா சாந்தியடையக்கூடிய கிரியைகளைச் செய்ய மறுத்தல்கூடாது. நாமறிந்த பிற சமயகுரவர்கள் அவ்விதமே மறுக்காது செய்கின்றனர். ஆனல் சைவசமயத்தில் மாத்திரமே சமயகுரவர் என்போர் பின்நிற்கின்றனர். இத்தகையோரைச் சமயகுரவர்கள் எனச் சைவமக்கள் எவ்விதம் கூறலாம்?

ஒரு சைவன்

யாழ்ப்பாணம்.

# நமது வாசிகசாலை

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆங்காங்கு மலிந்துள்ளன. இவை மாணவர்க்குப் பெரிதும் பயன்படுவனவாகும்.


149-ஆம் பக்கத்தில் "யாழ்ப்பாணத்துச் சரவணப்பிள்ளை எழுதிய மோகனங்கி" என்னும் குறிப்புள்ளது. மோகனங்கி என்னும் இனிய நூலினை இயற்றியவர் திருக்கோணமலை த. சரவணமுத்துப்பிள்ளை பி. ஏ. அவர்களாவர். இவர் ஈழநாட்டுக் கலைஞர்களுள் ஒருவராகிய திரு. தி. த. கனகசுந்தரம்பிள்ளை பி. ஏ. அவர்களின் சகோதரர். ஈழநாட்டு நூல்களுட் பல இவ் வரலாற்று நூலிற் குறிக்கப்பட்டில. சுருக்கமான நூல் எனினும், ஈழநாட்டில் எழுந்ததாதலின் ஈழநாட்டுத் தமிழ்நூற் பெயர்கள் சேர்க்கப்பட்டிருப்பின் நலம் பயக்கும்.

இந்நூல் மாணவர் விளங்கக்கூடிய தெள்ளிய நடையில் எழுதப்பட்டுள்ளது. மாணவர்க்குச் சிறப்பாக வேண்டப்படுவன யாவும் இதன்கண் உளவெனலாம். நன்கு பதிக்கப்பட்டுள்ளது.

அடுத்த பதிப்பில் ஈழநாட்டுத் தமிழ் இலக்கிய வரலாற்றுச் சுருக்கம் அனுபந்தமாகவெனினும் சேர்க்கப்படுதல் நன்று.

— மா. பீதாம்பரன்


## ரத்தினம் சுலபமான கோல்களை தவறிக்கொண்டிருந்தான்




Copyright : Horlicks Ltd.

HLC. 2608


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*The*

# EeLAKESARI

T'Phone No. 805

NATIONALIST TAMIL WEEKLY

Largest circulation in Ceylon, India, Burma & Malayan Union

Founder: N. PONNIAH

| Vol. 22 | Chunnakam, Sunday, Oct., 21, 1951 | No. 15 |
|---|---|---|

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. 6976**

வட்டுக்கோட்டை மேற்கு
**சிற்றம்பலம் நாகலிங்கம் கைம் பெண் பொற்கொடி,** காலஞ் சென்ற சிற்றம்பலம் நாகலிங்கத்தின் ஆஸ்திக்கு யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 1047-ம் இலக்கத் தத்துவ வழக்கில் தத்துவகாரியாகவும், வழக்காளி

வட்டுக்கோட்டை கிழக்கு
**1. ஆறுமுகம் மூத்ததம்பி**
**2. பெண் வள்ளியம்மை**

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 6976-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி, 1951-ம் ஆண்டு நவெம்பர் (கார்த்திகை) மாதம் 7-ந் திகதி (7-11-51) புதன்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத்தொகை :–** முதல் வட்டி ரூபாய் 895-ம், இதில் ரூபாய் 750-க்கு 30-8-50 திகதி தொடக்கம் 8-11-50 திகதி வரைக்கும் 100-க்கு 10 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 183 சதம் 65. இதில் ரூபாய் 150 இறுபட்டது.

### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி வட்டுக்கோட்டைக் கோவிற்பற்று வட்டுக்கோட்டை மேற்கிறை "பட்டிஒல்லை" நிலப்பரப்பு 8¾ யும், கிணறும், செய்பயிர் வான்பயிர்களும், கல்வீடும், எல்லை : கிழக்கு, ஒழுங்கை, வடக்கு கை ஒழுங்கை, மேற்கு, கதிரவேலுவின் ஆதனம், தெற்கு நாராணர் நடராசாவின் ஆதனம், இதில் சொரியலாய் பதினேழில் ஆறு பங்கு $(\frac{6}{17})$ ம் அதற்குரியவைகளும், முற்பதிவு E $\frac{263}{205}$.

**சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை**
Commissioner & Licensed Auctioneer

தெல்லிப்பழை,
25-9-51 [4429]

இப் பத்திரிகையில் வெளியாகும் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

## வறுமையே நீ வாழி!

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

"தொண்டர் புராணத்
தொடுகடலி லேஅருளால்
பண்டு கிழான் மொண்(டு)
உதவுபா லமுதமும்"
"கந்தன் கதைகடைந்து
கச்சியப்பன் அன்றெடுத்துத்
தந்த சுவைத்திரளு"ம்
"பேசுபுக ழேந்திகளி
வெண்பாம் பிழிந்துகம்பன்
ஆசைக் கவியில்
அநேகமுடைத் தத்தருவி"
"வில்லி தணிக
வியன்கதையின் பாலளவி,'
(பக். 111)

உண்பித்து அழுகை தவிர்த்து,
வள்ளுவன்மூப் பால்மடித்து
மணிகள் சூடி
வளையிளெடு குழையணிந்து
மாலை வேய்ந்து
தென்னுதமிழ்த் தேவாரம்
புனைந்து ஞானத்
திருக்கோவை பூண்டுமே
கலையும் சேர்த்தித்
தன்னரும்வா சகம்பேசிச்
சிலம்பு பூட்டித்
தனிரடிமேல் நாலடிப்பா
திகையு மாட்டி
(பக். 17)

நடைபயிற்றி,
முற்றுாத தெய்வமொழி
மூச்சங்கச் சீமாட்டி
வற்றாத பால்சுரக்கும்
வான்பசுக்காண் அம்மானை
வற்றாத பால்சுரக்கும்
வான்பசுவே யாமாயின்
மற்றுரோ பால்கறந்து
வைத்தார்காண் அம்மானை
வள்ளுவர்மூப் பால்கறந்து
வைத்தார்காண் அம்மானை
(பக். 126)

என அம்மானை ஆடுவித்து,
"மங்குலுறை வேங்கடமும்
குமரி யாறும்
வாரிதியும் நான்குபுடை
மதில்க ளாக்கி
சங்கவள முறுகூடல்
அரணஞ் சூழ்ந்த
தலைநகராய், அறமுதலாந்
தானை போற்றத்
தங்குமுடி மன்னர்திரு
மேனி காக்கத்
தூயகவி வாணர்சொலும்
சொற்கோ லோச்சி
(பக். 18)

அரசியாக்கி, அவ்வரசியை
"வரிபாடு மன்பர்
வகையாய் வகுத்த
பரிபாட லாடற்
பரி"யின்மிசை ஏற்றி,
(பக். 42)

அவ்வரசிக்கு,
கச்சங் கடக்கும் கதிர்மூலை
யாய்கவ லைக்கடலாம்
இச்சங் கடத்துக்கு எதுசெய்கு
வேன்எனை ஆண்டருள்வாய்
மூச்சங்க மேவி முழுதல
காண்டு முதுபுலவர்
அச்சங் கடத்தும் தமிழ்த்தெய்வ
மேயுன் அடைக்கலமே
(பக். 68)

எனவும்,
வஞ்சப் பிறவி மயக்கமும்
இன்னலும் மாற்றிஉன் றன்
கஞ்சத் திருவடி காட்டிட
வேண்டும் கவிப்புலவர்
நெஞ்சத் திருந்த நினைப்பை
முடிக்கும் நிறைமதியே
அஞ்சொற் தமிழ்த் தெய்வ
மேஅடியேனுன் அடைக்கலமே.
(பக். 68)

எனவும் தன்னை அடைக்கலமாக்கி ஆறுதலடைகிறார் புலவர். முதுபுலவர் அச்சங்கடத்தும் தமிழ்த் தெய்வம், இச்சங்கடத்தும் உதவிபுரிதல் கூடும் என்பதும், நெஞ்சத்திருந்த நினைப்பை முடிக்கும் ஆற்றல் வாய்ந்த தமிழ்த் தெய்வம் தனது நினைவையும் முடிப்பிக்கும் என்பதும் புலவரவர்கள் முடிவு போலும்.

### சந்தா விபரம்

ஆண்டுச் சந்தா :

| | |
|---|---|
| இலங்கை-இந்தியா | ரூ. 6-00 |
| மலாயா — | $ 6-00 |
| தனிப் பிரதி சதம் 10. காசு 10 | |

## வடமாகாண ஆசிரியர் சகாயநிதிச் சங்கம்

(1933-ம் ஆண்டில் நிறுவப்பட்டது)

அகால மரணமடையும் ஆசிரியரின் குடும்பத்துக்கும், இளைப்பாறும் ஆசிரியருக்கும் உதவி செய்யும் நோக்கமுடைய

**ஒரு ஸ்தாபனம்**

**30 வயதுக்குட்பட்ட சுயபாஷா ஆங்கில ஆசிரியர் அனைவரும் அங்கத்தவராகச் சேரலாம்.**

**1-1-51-ல் அங்கத்தவர் தொகை 637.**
**1-1-51-ல் கையிருப்பு ரூபா 1,32,603-37.**

1950-ல் இளைப்பாறிய எட்டு ஆசிரியருக்குச் சகாயமாகவும் கட்டணப் பணமாகவும் கொடுக்கப்பட்ட தொகை ரூபா 11,035-39

**அங்கத்தவராகச் சேராதவர்**

**இப்பொழுதே சேரவும்!**

சங்க விதிகள் மனுப்பத்திரம் முதலிய விபரங்களுக்கு பின்வரும் விலாசத்துக்கு எழுதவும்.

காரியதரிசி,
**வட மாகாண ஆசிரியர் சகாய நிதிச் சங்கம்,**
[4423] 8, பிறவுன் ரோட், : : யாழ்ப்பாணம்

"நான்
லக்ஸ் டாய்லட் சோப்
உபயோகிக்கிறேன்"
என்று கூறுகிறார்

**ஜீன் சிம்மன்ஸ்**

—ஜே. ஆர்தர் ரேங்க் ஆர்கனைஸேஷன் தயாரிப்பான "தி க்ளெளடெட் எல்லோ" எனும் படத்தில் நடிக்கும் நக்ஷத்திரம்




இனிய மணத்துடன் கூடிய இந்த வெண்மையானதும் சுத்தமானதுமான சோப் உங்கள் சருமத்தை வசீகரமாகச்செய்யும்!

**சினிமா நக்ஷத்திரங்களின் அழகு தரும் சோப்**

LTS. 307-X54 TM

## யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி

**1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.**

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

**இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா 34,36700. 100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.**

**பங்குப் பணம் கட்டுமுறை :**
மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாதந்தோறும் கட்டப்பட வேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்று வரவு :**
எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்று வரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம் :**
க்ஷேமப் பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம் 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள் :**
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.

இந்தியா கோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

**கடன் :**
நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்

[4412]

இப்பத்திரிகை, இதன் சொந்தக்காரருக்காக, யாழ்ப்பாணம்—குரும்பசிட்டி, முத்தையா-சபாரத்தினம் அவர்களால் சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தில் 1951-ம் ஆண்டு ஒக்டோபர் மீ 21-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org